# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

# மஞ்சக்குடி

முனைவர். சு. ரமேஷ்

தமிழ்த்துறை

**பாடத் தலைப்பு – சங்க இலக்கியம், திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு, இனியவை நாற்பது, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம்.**

பாடத் தயாரிப்பு

முனைவர். சு. ரமேஷ்

அலகு - 3

## சங்க இலக்கியம்

# 1. திருக்குறள்

இரண்டு அடிகளில் உலகியல் நீதிகளையெல்லாம் பறைசாற்றிய முதல் நூல் திருக்குறளாகும். அனைத்து நாட்டினருக்கும், சமயத் தினருக்கும், எல்லா காலத்திற்கும் பொருந்தும் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக் கூறும் திருக்குறள் நீதி நூற்களில் எல்லாம் தலைசிறந்த நூலாகும். உலகப் பொதுமறை என்றழைக்கப்படும் திருக்குறளில் இடம்பெறாத அறச் செய்திகளே இல்லை எனலாம். குறுகிய வடிவினைக் கொண்டிருப்பதால் திருக்குறள் என்று பெயர் வைத்திருக்கலாம்.

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திருக்குறள் |
| நூலாசிரியர் | : | திருவள்ளுவர் |
| பா வகை | : | வெண்பா (குறள் வெண்பா) |
| பாடல்கள் | : | 1330 பாடல்கள் |
| நூல் பிரிவு | : | அறத்துப்பால், பொருட்பால், இன்பத்து பால் 38 அதிகாரம் 70 அதிகாரம் 25 அதிகாரம் |
| அதிகாரங்கள் | : | 133 |
| காலம் | : | சங்கம் மருவிய காலம் |
| சிறப்புப் பெயர்கள் | : | தமிழ்மறை, உலகப் பொதுமறை, வள்ளுவம், முப்பால், பொய்யாமொழி, தெய்வ நூல், வாயுரை வாழ்த்து, உத்ர வேதம் |
| திருவள்ளுவரின் வேறு பெயர்கள் | : | 1. தெய்வப் புலவர், 2. நாயனார், 3. முதற்பாவலர், 4. நான்முகனார், 5. தேவர், 6. மாதானுபங்கி, 7.பெரு நாவலர், 8. செந்நாப் போதகர். |

## அறன் வலியுறுத்தல்

1. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
   ஆக்கம் எவனோ உயிர்க்கு

2. அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை
   மறத்தலி னூங்கில்லை கேடு

3. ஒல்லும் வகையா ளறவினை யோவாதே
   செல்லும்வா யெல்லாஞ் செயல்

4. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
   னாகுல நீர பிற

5. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கு
   யிழுக்கா வியன்ற தறம்

6. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
   பொன்றுங்காற் பொன்றாத் துணை

7. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
   பொறுத்தானோ டூர்ந்த னிடை

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
   வாழ்நாள் வழியடைக்கும் கல்

9. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
   புறத்த புகழு மில

10. செயற்பால தோரு மறனே யொருவற்
    குயற்பால தோரும் பழி

*அறன் வலியுறுத்தல் என்பது மனிதப் பிறவிக்குக் கடமைகள் என்று கருதி, உத்தி அனுபவங்களால் கண்டறிப்பட்ட நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறுவது அறன் வலியுறுத்தலாகும்.*

1. *சிறப்பினைத் தரும்; செல்வமும் தரும்; அப்படிப்பட்ட தர்மத்தைக் காட்டிலும் உயர்ந்த பொக்கிஷம் மனிதருக்கு வேறு என்ன இருக்கிறது.*

2. *அறமாகிய நல்ல செயலைச் செய்வதைக் காட்டிலும் நல்லசெயல் வேறில்லை. அதை மறந்துவிடுவதைக் காட்டிலும் கெடுதலும் வேறில்லை.*

3. *நல்ல செயல்களைச் சக்திக்கு எட்டிய மட்டிலும் சமயம் கிடைக்கும். பொழுது எல்லாம் தொடர்ந்து செய்ய வேண்டும்.*

4. *மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அதுதான் தர்மம் ஆகும். மற்ற செயல்கள் எல்லாம் ஆடம்பர வகையைச் சார்ந்தது ஆகும்.*

5. *பொறாமை, சுயநல ஆசை, கடும்கோபம், கடும்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் மனதில் இடம் கொடுக்காமல் செய்கிற செயல்கள் எல்லாம் நல்ல செயல்களாகவே இருக்கும்.*

6. *இறக்கப் போகின்ற அன்றைக்குச் செய்துகொள்ளலாம் என்று ஒத்திப்போடாமல் இப்பொழுதிலிருந்தே அறச் செயல்களைச் செய்யத் தொடங்க வேண்டும். அப்படிச் செய்வது, உடல் அழிந்த பின்னும் தான் அழியாமலிருந்து உயிர்க்கு உதவி செய்யும்.*

7. *பல்லக்கைச் சுமந்துகொண்டு போகிறவனுக்கும் அதில் சவாரி செய்துகொண்டு போகிறவனுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்பதை ஆராய்ந்து பார்த்தால் தர்மத்தின் பலன் என்னவென்பதை யாரும் நமக்குச் சொல்ல வேண்டியதில்லை.*

8. *இறப்பு வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்து விடாமல் நலமாக இருக்கும்போதே சரியான முறையில் அறங்களைச் செய்கிறவனுக்கு, அச்செயல் அவன் மீண்டும் பிறப்பதற்குள்ள காரணங்களை இல்லாமல் செய்துவிடக்கூடிய கற்கோட்டை ஆகும்.*

9. *தர்மமான செயல்களைச் செய்து அதனால் வருகிற மகிழ்ச்சிதான் சரியான இன்பமாகும். இது தவிர பிற வழிகளில் அடைகிற மகிழ்ச்சி இன்பம் அல்ல. புகழ்கூட கிடைக்காது.*

10. *ஒவ்வொருவரும் ஆராய்ந்து செய்யவேண்டிய செயல் அறமே ஆகும். மனிதர்கள் செய்யக்கூடாத, விலக்கவேண்டியது பழிச் சொல் வரக்கூடிய செயல்களையே ஆகும்.*

## 2. நாலடியார்

*நீண்ட அடி வரையின்றி, குறைந்த அடிகளைக் கொண்டதாக வருவது கீழ்க்கணக்கு நூற்களாகும்.*

**அடிநிமிர்பு இல்லாச் செய்யுள் தொகுதி**
**அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்**
**திறம்பட உரைப்பது கீழ்க்கணக்கு ஆகும்.”**

*என்று பன்னிருபாட்டியல் விளக்கம் கூறுகிறது. அறநூல்கள் பதினொன்றில் இரண்டாவது சிறப்பிற்குரிய நூல் நாலடியார். திருக்குறள் போன்று முப்பால் அமைப்பில் பகுக்கப்பட்டுள்ளது.*

| | | |
|---|---|---|
| *நூல் பெயர்* | : | *நாலடியார்* |
| *நூலாசிரியர்* | : | *சமண முனிவர்கள்* |
| *பாடல்கள்* | : | *400+1* |
| *பா* | : | *வெண்பா* |
| *நூல் பிரிவு* | : | *அறத்துப்பால் = 13 அதிகாரங்கள்* |
| | | *பொருட்பால் = 26 அதிகாரங்கள்* |
| | | *காமத்துப்பால் = 1 அதிகாரம்* |
| | | *40 அதிகாரங்கள்* |
| *தொகுத்தவர்* | : | *பதுமனார்* |
| *சிறப்புப் பெயர்* | : | *நாலடி, வேளாண் வேதம், மனித வாழ்வியல் அறங்களை அழகுற எடுத்துக் கூறும் நூல் நாலடியாராகும்.* |

1. **குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்**
   **மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
   **நல்லயாம் என்னும் நடுவு நிலைமையால்**
   **கல்வி அழகே அழகு.**

*அழகிய தலைமுடியின் அழகும், வளைத்து உடுத்தப்படும் ஆடையின் கரை அழகும், முகத்தில் பூசுகின்ற மஞ்சள் பூச்சின் அழகும் மக்களுக்கு நிலைத்த அழகுகள் அல்ல. நாம் நல்லவனாக நடக்கின்றோம் என்று தம் மனம் அறிய உண்மையாக உணரும் ஒழுக்கத்தைப் பயத்தலால் மக்களுக்குக் கல்வியழகே உயர்ந்த அழகாகும்.*

# 3. நான்மணிக்கடிகை

நான்கு + மணி + கடிகை = நான்மணிக்கடிகை

‘கடிகை’ என்ற சொல் தோள்வளை அல்லது கடகம் என்று பொருள்படும். நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற ஆபரணம் போல் (தோள்வளை) ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணிகள் போன்ற நீதி கருத்துக்களை எடுத்துக் கூறுவதால் இந்நூலுக்கு நான்மணிக்கடிகை என்று பெயர் வந்தது.

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | நான்மணிக்கடிகை |
| நூலாசிரியர் | : | விளம்பிநாகனார் |
| காலம் | : | கி.பி. 4ஆம் நூற்றாண்டு |
| பா | : | வெண்பா |
| பாடல்கள் | : | 2+104=106 |
| | : | 2 கடவுள் வாழ்த்துப் பாடல்கள் |
| நூல் வனப்பு | : | அம்மை |

நான்மணிக்கடிகையில் உள்ள 106 பாடல்களிலும் நான்கு அறக்கருத்துக்களை எடுத்துக் கூறும் நூலாகும்.

1. **நிலத்துக் கணியென்ப நெல்லும் கரும்பும்**
**குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை**
**நலத்துக் கணியென்ப நாணத் தனக்கணியாம்**
**தான்செல் உலகத் தறம்.**

வயலுக்கு அழகு என்பது நெற்பயிரும் கரும்புப் பயிரும் என்று கூறுவர். குளத்திற்கு அழகு என்பது தாமரைக் காடுகள் என்று சொல்லுவர். நாணும் இயல்பு பெண் தன்மைக்குரிய கற்பாகிய நன்மைக்கு அழகு என்று சொல்லுவர். தான் செல்லும் மறுமை உலகத்திற்குத் துணையாகச் செய்யப்படும் அறங்கள் தனி ஒருவனுக்கு அழகாகும்.

# பழமொழி நானூறு

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் உள்ள மூன்று முதன்மையான நூல்களுள் பழமொழி நானூறு ஒன்றாகும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியினை வைத்து அதற்கு இணையான உலகியல் நீதியினை எடுத்துக் கூறும் நூல் பழமொழி நானூறு ஆகும்.*

| | | |
|---|---|---|
| *நூல் பெயர்* | : | *பழமொழி நானூறு* |
| *நூலாசிரியர்* | : | *முன்றுறையரையனார்* |
| *பா* | : | *வெண்பா* |
| *பாடல்கள்* | : | *400* |
| *நூல் பிரிவுகள்* | : | *ஐந்து* |
| *இயல் பிரிவுகள்* | : | *மூன்று* |
| *சமயம்* | : | *சமண சமயம்* |

*பழந்தமிழகத்தில் மக்கள் வாழ்வியலில் வேரோடிப் போயிருந்த பழமொழிகளையும் இலக்கியம் சார்ந்த பழமொழிகளையும் தொகுத்து இந்நூலை உருவாக்கி இருக்கின்றனர்.*

1. **தந்நடை நோக்கார் தமர்வந்தவாறு அறியார்**
   **செந்நாடை சேராச் சிறியார் போல் ஆகாது**
   **நின்நடை யாவே நடஅத்தா! நின்னடை**
   **நின்நின்று அறிகிற்பார் இல்**

*அத்தனே! உன்னுடைய ஒழுக்கத்தை உன்னிடத்தினின்றும் அறிதலுடையார் இல்லை. நீயே அறிவாய். ஆகையால் தமது ஒழுக்கத்தை ஆராய்தலின்றி, தம் சுற்றத்தார் ஒழுகி வந்த வரலாற்றையும் அறியமாட்டார். செவ்விய நடையைச் சேராத அறிவிற் சிறியார் போல் ஒழுகாமல் நினக்கு விதிக்கப்பட்ட, உன்குடிக் கேற்ற ஒழுகக் கடவாயாக!*

# 5. இனியவை நாற்பது

*மனித வாழ்க்கையில் இன்பம் தரும் செயல்கள் எவை எவை எடுத்துக் கூறும் நூலாதலால் இந்நூலுக்கு இனியவை நாற்பது என்று பெயர். ஒவ்வொரு பாடலிலும் நான்கு இனிமையான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளது.*

| | | |
|---|---|---|
| *நூல் பெயர்* | : | *இனியவை நாற்பது* |
| *நூலாசிரியர்* | : | *பூதஞ்சேந்தனார்* |
| *காலம்* | : | *கி.பி. 4 ஆம் நூற்றாண்டு* |
| *பாடல்கள்* | : | *1+40=41* |
| *பா* | : | *வெண்பா* |

*இந்நூல் பொருளமைப்பில் திரிகடுகத்தையும் நூலமைப்பில் இன்னா நாற்பதையும் ஒத்துக் காணப்படுகிறது.*

1. **இளமையை மூப்பென் றுணர்தல் இனிதே**
**இளைஞர்மாட் மச்சின்மை கேட்டல் இனிதே**
**தடமென் பணைத்தோட்ட டளிரய லாரை**
**விடமென் றுணர்தல் இனிதே**

*தனக்குள்ள இளமைப் பருவத்தை முதுமைப் பருவம் என்று நினைத்தல் இனிதாகும். சுற்றத்தாரிடத்தே அச்சத்திற்குக் காரணமாகிய துன்பமில்லாத செய்தியினைக் கேட்டல் இனிதாகும். பெரிய மென்மையாகிய மூங்கிலை ஒத்த தோள்களையும், தளிரையொத்த மென்மையுடைய மகளிரை நஞ்சு என்று நினைத்தல் இனிதாகும்.*

## அலகு - 4

# 1. சிலப்பதிகாரம்

*ஐம்பெரும் காப்பியங்களில் முதலாவது காப்பியம் சிலப்பதிகார மாகும். தமிழ்க்காப்பிய வரலாற்றில் அரசர்களையும், செல்வந்தர் களையும் தவிர்த்து சாதாரண குடிமக்களில் ஒருவராகிய கோவலன்-கண்ணகி வரலாற்றைக் கூறும் பேரிலக்கியமாகும். சிலம்பினை முதன்மையாக வைத்து பாடப்பட்டமையால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. சிலம்பு+அதிகாரம்= சிலப்பதிகாரம். இக்காப்பியம் மட்டுமே தமிழ் மரபு அடிப்படையில் தோன்றிய காப்பியம். தமிழ் மரபையும், பண்பாட்டையும், வாழ்க்கை முறைகளையும், தமிழிசை, கூத்து போன்ற நாட்டுப்புற சாயலையும் வெளிப்படுத்தும் அழகுதமிழ் காப்பியமாகும்.*

*மனிதத்தை தெய்வநிலையாக உயர்த்திய பெருங்காப்பியமாகும். வாணிக குலத்தில் பிறந்த நங்கையை தெய்வநிலைக்கு உயர்த்தியது. சோழ நாட்டில் பிறந்த கண்ணகி பாண்டிய நாட்டினில் கோவலனாகிய கணவனை இழந்து, சேர நாட்டினில் தெய்வநிலையை அடைகிறாள். அதனால் தான் கண்ணகியை கவுந்தியடிகள்,*

**“கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்”**

*என்று புகழ்கிறார்.*

*சிலம்பு தனி மனித வாழ்வியலை நெறிப்படுத்தும் நோக்கினில் மூன்று உண்மைகளின் மீது இக்காப்பியம் கட்டமைக்கப் பட்டுள்ள தாகக் கூறுகிறது.*

**“அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்”**

*கடவுள் வாழ்த்துக்குப் பதிலாக இயற்கை வாழ்த்தைப் பாடி புதுமை செய்த முதல் புரட்சிக் காப்பியம் சிலப்பதிகாரமாகும்.*

| | |
|---|---|
| *நூல் பெயர்:-* | *சிலப்பதிகாரம்* |
| *நூலாசிரியர்:-* | *இளங்கோவடிகள்* |
| *காலம்:-* | *கி.பி. இரண்டாம் நூற்றாண்டு* |

*பா:-* *ஆசிரியப்பா (நிலைமண்டில ஆசிரியப்பா)*

*அடிகள்:-* *5001*

*பிரிவுகள்:-* *காண்டங்கள் மூன்று*

*1. புகார்க்காண்டம் - பத்து காதைகள்*

*2. மதுரைக் காண்டம் - பதிமூன்று காதைகள்*

*3. வஞ்சிக் காண்டம் - ஏழு காதைகள்*

*சமயம்:-* *சமணம்*

*சிறப்புப்பெயர்கள்:-* *தமிழ்க்காப்பியம்,*

*முதன்மைக்காப்பியம்,*

*பத்தினிக் காப்பியம்,*

*குடிமக்கள் காப்பியம்,*

*மூவேந்தர் காப்பியம்,*

*புரட்சிக் காப்பியம்,*

*வரலாற்றுக் காப்பியம்.*

1. *ஐம்பெரும் காப்பியங்களில் காலத்தால் முந்தியது.*
2. *தமிழில் தோன்றிய முதல் காப்பியம். கடைச் சங்கக்காலத்தைச் சார்ந்தது என்பர்.*
3. *மூன்று நாடு, மூன்று நகர், மூவேந்தர் பற்றி மூன்று காண்டங்களில் பாடப்பட்ட காப்பியம்.*
4. *கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய மூவரும் காப்பியத் தலைவர் களாக மூவகைத் தமிழிலும் அழகுறப் பாடப்பட்டக் காப்பியம் சிலப்பதிகாரமாகும்.*

## சிலப்பதிகாரம் வழக்குரை காதை
## மதுரைக் காண்டம் - 10 வழக்குரை காதை

**1**

**ஆங்கு,**
**குடையொடு கோல் வீழ் நின்று நடுங்கும்**
**கடை மணியின் குரல் காண்பென் - காண், எல்லா**
**கடை மணியின் குரல் காண்பென் - காண், எல்லா!**
**திசை இரு - நான்கும் அதிர்ந்திடும்; அன்றி;**
**கதிரை இருள் விழுங்கக் காண்பென் - காண், எல்லா!**
**விடும் கொடிவில் இர; வெம் பகல் வீழும்**
**கடுங் கதிர் மீன்; இவை காண்பென் - காண்; எல்லா!'**

**விளக்கம்**

2

செங்கோலும், வெண்குடையு,
செறி நிலத்து மறிந்து வீழ்தரும்;
நம் கோன் - தன் கொற்ற வாயில்
மணி நடுங்க, நடுங்கும் உள்ளம்;
இரவி வில் இடும்; பகல் மீன் விழும்;
இரு - நான்கு திசையும் அதிர்ந்திடும்;
வருவது ஓர் துன்பம் உண்டு;
மன்னவற்கு யாம் உரைத்தும்' என -

3

ஆடி ஏந்தினர்; கலன் ஏந்தினர்,
அவிர்ந்து விளங்கும் அணி இழையினர்;
கோடி ஏந்தினர், பட்டு ஏந்தினர்,
கொழுந் திரையலின் செப்பு ஏந்தினர்,
மான்மதத்தின் சாந்து ஏந்தினர்,
கண்ணி ஏந்தினர், பிணையல் ஏந்தினர்,
கவரி ஏந்தினர், தூபம் ஏந்தினர்,
கூனும், குறளும், ஊமும், கூடிய
குறுந் தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர;
நரை விரைஇய நறுங் கூந்தலர்,
உரை விரைஇய பலர் வாழ்த்திட
'ஈண்டு நீர் வையம் காக்கும்
பாண்டியன் பெருந்தேவி! வாழ்க' என,
ஆயமும் காவலும் சென்று
அடியீடு பரசி ஏத்த;
கோப்பெருந்தேவி சென்று தன்
தீக் கனாத் திறம் உரைப்ப-
அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்,
திரு வீழ் மார்பின் தென்னவர் கோவே-

4

இப்பால்,
'வாயிலோயே! வாயிலோயே!
அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து,
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!
"இணை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்,
கணவனை இழந்தாள், கடைஅகத்தாள்" என்று
அறிவிப்பாயே! அறிவிப்பாயே!' என-

5

வாயிலோன், 'வாழி! எம் கொற்கை வேந்தே, வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ, வாழி!
செழிய, வாழி! தென்னவ, வாழி!
பழியொடு படராப் பஞ்சவ, வாழி!
அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந் துணிப்
பிடர்த் தலைப் பீடம் ஏறிய மடக்கொடி,
வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை, அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேர் உரம் கிழித்த பெண்ணும், அல்லள்;
செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொன் தொழில் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்;
கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே;
கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே' என-

6

'வருக, மற்று அவள் தருக, ஈங்கு' என-
வாயில் வந்து, கோயில் காட்ட,
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி-

7

'நீர் வார் கண்ணை, எம் முன் வந்தோய்!
யாரையோ, நீ? மடக்கொடியோய்!' என-

8

'தேரா மன்னா! செப்புவது உடையேன்;
எள் அறு சிறப்பின் இமையவர் வியப்ப,
புள் உறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயில் கடை மணி நடு நா நடுங்க,
ஆவின் கடை மணி உகு நீர் நெஞ்சு சுட, தான் தன்
அரம்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என் பதியே; அவ் ஊர்,
ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்கொடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி,
வாழ்தல் வேண்டி, ஊழ்வினை துரப்ப,
சூழ் கழல் மன்னா! நின் நகர்ப் புகுந்து, இங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்

கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பது என் பெயரே' என-

9
'பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங் கோல் அன்று;
வெள் வேல் கொற்றம் - காண்' என - ஒள் - இழை,

10
'நல் திறம் படராக் கொற்கை வேந்தே!
என் கால் பொன் சிலம்பு மணி உடை அரியே' என -

11
'தேமொழி! உரைத்தது செவ்வை நல் மொழி;
யாம் உடைச் சிலம்பு முத்து உடை அரியே;
தருக' எனத் தந்து, தான் முன் வைப்ப -

12
கண்ணகி அணி மணிக் கால் சிலம்பு உடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது, மணியே - மணி கண்டு,
தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,
'பொன் செய் கொல்லன் - தன் சொல் கேட்ட
யனோ அரசன்? யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென் புலம் காவல்
என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்! என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே - தென்னவன்
கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கி,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று
இணை அடி தொழுது வீழ்ந்தனள், மடமொழி.

13
வெண்பா
'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் ஆம்' என்னும்,
பல் அவையோர் சொல்லும் பழுது அன்றே - பொல்லா
வடுவினையே செய்த வய வேந்தன் தேவி!
கடு வினையேன் செய்வதூஉம் காண்.
காவி உகு நீரும், கையில் தனிச் சிலம்பும்,
ஆவி குடிபோன அவ் வடிவும், பாவியேன்!
காடு எல்லாம் சூழ்ந்த கருங் குழலும் - கண்டு, அஞ்சி,
கூடலான் கூடு ஆயினான்.

**மெய்யில் பொடியும், விரித்த கருங் குழலும்,**
**கையில் தனிச் சிலம்பும், கண்ணீரும், வையைக் கோன்**
**கண்டளவே தோற்றான், அக் காரிகை - தன் சொல் செவியில்**
**உண்டளவே தோற்றாள், உயிர்.**

## வழக்குரை காதை

### பாண்டிய தேவியின் தீக்கனவு 1-7

*கண்ணகி அரண்மனை வாயிலை நெருங்கியபோது, பாண்டிமா தேவி தான் கண்ட தீக் கனவைத் தோழியிடம் கூறிக் கொண்டிருந்தாள். "தோழி! தம் வேந்தனது வெண்கொற்றக் குடையும் செங்கோலும் கீழே விழக்கனவு கண்டேன்! வாயிலில் இடைவிடாது அசையும் மணியின் ஓசையும் நான் கனவிலே கேட்டேன்! எட்டுத் திசைகளும் அப்போது அதிர்ச்சியுற்றன! அன்றியும் தோழி! சூரியனை இருள் இருள் விழுங்கவும் கனவு கண்டேன்! நண்பகலிலே விண்மீன்கள் எரி கொள்ளிகளாகக் கீழே விழக் கனவு கண்டேன். இவற்றின் பயன் யாதோ தோழி!*

### அறிகுறி 8-12

*"செங்கோலும் வெண்கொற்றக் குடையும் செறிந்த நிலத்திரேல முறிந்து வீழ்ந்தன. நம் வேந்தனது கொற்ற வாயிலின்கண் கட்டிய மணி என் உள்ளன். நடுங்குமாறு அசைந்து ஒலித்தது. இரவில் வானவில் தோன்றியது. பகலில் விண்மீன்கள் எரிந்து கீழே விழுந்தன. எட்டுத் திக்கும் அதிர்ந்தன. ஆதலால் நமக்கு வரக்கூடிய துன்பம் ஒன்று உள்ளது! எனவே மன்னனிடம் சென்று களவைக் கூறுவோம்!" என்று கூறி மன்னனை நாடி செல்லலானாள்.*

### கோப்பெருந்தேவியின் வருகை 13-23

*அப்போது தேவியைச் சூழ்ந்து வந்தனர். மகளிர் அவர்களில் சிலர், கண்ணாடி ஏந்தி வர. சிலர் அணிகளை ஏந்தி வர, சிலர் அழகிய கலன்களை ஏந்தி வர, சிலர் புதிய நூலாடையும் பட்டாடையும் ஏந்தி வர, சில வெற்றிலைச் செப்பினை ஏந்தி வர, சிலர் வண்ணமும் சுண்ணமும் கத்தூரி கலந்த சந்தனக் குழம்பும் ஏந்தி வர, சிலர் தொடையல் மாலை, பிணையல், கவரி தூபம் ஆகியவற்றை ஏந்தி வந்தனர். கூனரும், குறளரும் ஊமையருமான குற்றேவல் மகளிர் அரசியை நெருங்கி வந்தனர். நரை கலந்த நல்ல கூந்தலையுடைய முதுமகளிர் பலர், "கடல் சூழ்ந்த இவ்வுலகத்தினைக் காக்கும்.*

*பாண்டியனுடைய பெருந்தேவி நீடு வாழ்க! என வாழ்த்தினர். வழிபடும் தோழியரும், காவல் மகளிரும், தேவி அடியெடுத்து வைக்குந்தோறும் புகழ்ந்து போற்றி வந்தனர். தன் பரிவாரங்களுடன்*

*இவ்வாறு சென்ற கோப்பெருந்தேவி, தன் கணவனிடம் தான் கண்ட தீய கனவின் தன்மையை எடுத்துச் சொல்ல, அதனைக் கேட்டுக் கொண்டு, திருமகள் விரும்பும் மார்பினையுடைய பாண்டியன் நெடுங்செழியன், சிங்கம் சுமந்த அமளியின் மீது அமர்ந்திருந்தான்.*

### சிலம்பொன்று ஏந்திய கையள்! 24-44

*அப்போது சீறிச்சினந்து அங்கு வந்த கண்ணகி, "வாயில் காப்பவனே! வாயில் காப்பவனே! அறிவு முழுவதும் அற்றுப்போன அறநினைவு அற்ற நெஞ்சத்துடன் அரச நீதியினின்றும் தவறியவனின் வாயில் காப்பவனே! பரலினையுடைய இரண்டு சிலம்புகளில் ஒன்றினைக் கையில் ஏந்தியவளாய்க் கணவனை இழந்த ஒருத்தி, நம் அரண்மனை வாயிலின்கண் உள்ளாள்." என்று வேந்தனிடம் சென்று அறிவிப்பாய்! அறிவிப்பாய்!" என்றாள். அது கேட்ட வாயிலோன் அரசனிடம் சென்று, "எமது கொற்கை நகரத்து வேந்தே! வாழ்க! தெற்கே உள்ள பொதிய மலைக்குத் தலைவனே! வாழ்க! செழியனே! வாழ்க! பாண்டியனே! வாழ்க! இதுவரை பழிச்சொற்கள் படராத பஞ்சவனே, வாழ்க! வெட்டு வாயினின்றும் பீறிட்டெழும் குருதி நீங்காத பசிய மூண்டமாகிய படர்த்தலையாகிய பீடத்தின்கண் ஏறியிருந்த இனங்கொடியாகிய வெற்றி தரும் வேலினைத் தன் பெரிய கையிலே ஏந்திய கொற்றவையும் அல்லன்; கன்னியர் எழுவருள் பிடாரியும் அல்லள்; இறைவனை நடனமாடச் செய்த பத்திரகாளியும் அல்லள்; கண்டார்க்கு அச்சத்தைத் தரும் காட்டைத் தான் விரும்பும் இடமாகக் கொண்ட காளியும் அல்லள்; தாருகனிள் பரந்த மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்; தனது உள்ளத்தில் கறுவு கொண்டவன் போலவும், மிக்க சினம் கொண்டவள் போலவும் விளங்குகின்றள்! வேலைப்பாடு மிக்க பொற்சிலம்பு ஒன்றினைக் கையில் ஏந்தியவளாய்த் திகழ்கிறாள்! கணவனை இழந்த அவள் தம் வாயிலின் முன்னே நிற்கின்றாள்" என்று அறிவித்தான்.*

### யாரையோ நீ மடக்கொடி? 45-63

*"அத்தகையவளை வருக" எனக் கூறி இங்கே அழைத்து வருக!" என ஆணையிட்டான் மன்னன். கண்ணகி அரசனை அனுகிச் சென்றபோது, அவன், "நீர்பெருகும் கண்களையுடையவளே! என்முன் வந்து நிற்பவளே! இளங்கொடி போன்றவளே! நீயார்?" என்று கேட்டாள்:*

*"ஆராய்ச்சி யில்லாத மன்னனே! நின்னிடம் சொல்ல வேண்டிய தொன்று உண்டு உண்டு! கேள்! இகழ்தலற்ற சிறப்பினையுடைய தேவர்களும் வியப்புறுமாறு, புறா ஒன்றின் துயரத்தினைப் போக்கிய*

*சிபியும், கட்டிய மணியின் நடுவிலுள்ள நாவானது அசைய, பசுவின் கடைக் கண்களினின்றும் ஒழுகும் நீர் தனது உள்ளத்தைக் சுட, தானே தன் அரும்பெறல் புதல்வனைத் தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதி சோழனும் ஆண்ட மிக்க புகழினையுடைய புகார் நகரமே நான் பிறந்த ஊர். அவ்வூரில் பழியற்ற சிறப்புடன் கூடிய புகழ் எங்கும் விளங்கம் பெருங்குடிக்கண் மாசாத்துவான் என்றும் வணிகனுக்கு மகனாகத் தோன்றி, பொருளீட்டி வாழ்க்கை நடத்தலை விரும்பி, முன்னைத் தீவினை செலுத்துதலால் வீரக்கழலணிந்த மன்னனே! நினது மதுரை நகரத்தினுள் புகுந்து, இங்கு என் காற்சிலம்பினை விற்றல் காரணமாக நின்னிடத்துக் கொலையுண்ட கோவலன் மனைவி நான் என் பெயர் கண்ணகி!" என்றாள்.*

## தேன்மொழி! நீ உரைத்தது நன்மொழி! 64-72

*அது கேட்ட மன்னன், "பெண் அணங்கே! கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோன்மை அன்று! அதுவே அரச நீதி!" என்றான். கண்ணகி "அறநெறியில் செல்லாத கொற்கை வேந்தே! என் கால் பொற்சிலம்பு மாணிக்கக் கற்களைப் பரல்களாகக் கொண்டது!" என்றாள். பாண்டியனோ, "தேன் போலும் இனிய மொழி பேசுபவளே! நீ உரைத்தவை நீதியை நிலைநாட்ட உதவும் நல்ல சொற்களாகும்! எம் சிலம்பு முத்துக்களைப் பரல்களாகக் கொண்டது!" என்று கூறிப் பின் ஏவலரை நோக்கி "முன்னர்க் கோவலனிடமிருந்து பெற்ற அச்சிலம்பைக் கொணர்க! எனக் கட்டளையிட்டு, வரவழைத்து அதனைத் தானே கண்ணகியிடம் வைத்தான்! உடனே கண்ணகி தான் அணியும் அழகிய சிலம்பை வீசியெறிந்து உடைத்த அளவில், அதனின்றும் எழுந்த மாணிக்கப் பரல் ஒன்று பாண்டியனின் வாயருகே தெறித்துக் கீழே வீழ்ந்தது.*

## யானோ அரசன்? யானே கள்வன்! 73-81

*அவ்வாறு தெறித்த மாணிக்கப்பரல் கண்டு திடுக்கிட்ட பார்வேந்தன். தாழ்வுற்ற குடையனாய், தளர்ந்த செங்கோலாய், "பொன் செய் கொல்லன் பொய்யுரை கேட்டு நீதி தவறிய யானோ அரசன்? அரசன் அல்லன்! கோவலன் சிலம்பை என்றுடையதாகக் கொண்டதால் நானே திருடன்! எனக் கூறி உள்ளம் குமுறினான்; துடித்தான்; மக்களைக் காக்கும் பாண்டி நாட்டு ஆட்சிக்கு என் காரணமாகத் தவறு நேர்ந்து விட்டதே! (இது, இனி வரும் பாண்டியன் பரம்பரைக்கெல்லாம் பழியாயிற்றே!) எனப் பதறினான்! "கெடுக, என் ஆயுள்" எனத் தனக்குத் தானே தண்டனை விதித்துக் கொண்டு மயங்கி வீழ்ந்து மாண்டு போனான்! தென்னவனின் தெய்வக் கற்பினைனாகிய கோப்பெருந்தேவி உள்ளம் குலைத்தாள்.*

*உடல் நடுங்கினான்; தாய் தந்தையரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டி ஆறுதல் கூற முடியும்! ஆனால் கணவனை இழந்தோர்க்கு அங்ஙனம் காட்டலாகாது எனக் கருதித் தன் கணவனின் இணையடிகளைத் தொட்டு வணங்கி வீழ்ந்து இறந்தாள்.*

## வெண்பா உரை (கண்ணகி கூற்று)

*1) "பாவச் செயல்களைச் செய்தவர்களை, அறமே எமனாக இருந்து தண்டிக்கும்" என்று பல அவையில் சான்றோர் கூறும் சொற்கள் பொய்யல்ல! கொடிய தீங்கினைச் செய்த வெற்றி வேந்தனின் தேவியே! தீவினைக்கு ஆட்பட்ட யான் இனிச்செய்யவிருக்கும் செயல்களையும் நீ காண்பாயாக!" (இது பாண்டிமாதேவி இறந்தது தெரியாமல் கண்ணகி கூறியது.)*

## வெண்பா உரை: (கண்போர் ஒருவர் கூற்று)

*3) "கண்ணகியின் மேனியில் படிந்த புழுதியையும், அவளது விரிந்து கிடந்த கரிய கூந்தலையும், அவளது கையில் இருந்த ஒற்றைச் சிலம்பையும், அவளது கண்ணீரையும் வையைக் கோமானாகிய பாண்டியன் கண்ட உடனே வழக்கில் தோற்றான்! அக்கண்ணகி வழக்காடிய சொற்கள் செவியில் புகுந்தபோது அவன் உயிரையும் நீத்தான்."*

### அந்தில் அவர்க்குஓர் அற்புதம் கூறும்

15
இரவி வன்மண் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
அமுத பதிவயிற்று அரிதில் தோன்றித்
தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
அவ்வையர் ஆயினீர் நும்மடி தொழுதேன்
வாய்வ தாக மானிட யாக்கையில்

16
தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்குஈங்கு
அறவண வடிகள் தம்பால் பெறுமின்
செறிதொடி நல்லீர் உம்பிறப்பு ஈங்குஇஃது
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் நீயிரும் தொழும்எனத்
தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்
பழுதுஅறு மாதவன் பாதம் படர்கேம்
எழுகென எழுந்தனள் இளங்கொடி தான்என்.
பாத்திரம் பெற்ற காதை முற்றிற்று.

## 2. மணிமேகலை

*மணிமேகலை ஐம்பெரும் காப்பியங்களில் இரண்டாவது காப்பிய மாகும். புரட்சிகரமான காப்பியம்! பேரரசர்களையும் பெருந்தன வணிகர்களையும் தவிர்த்து இழித்தும் பழித்தும் கூறப்பட்ட கணிகையர் குலப்பெண் மாதவியின் மகளான மணிமேகலையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்ட பேரிலக்கியமாகும். எளிய நடை- இனியசொல்லாட்சி - மக்கள் நலம் - மனிதநேயம். வாழ்வியல் விழுமியங் களைப் பேசிய முதல் காப்பியமாகும். மக்கள் வாழ வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளை, உயர்ச் சிந்தனைகளை, நேரிய வாழ்க்கையை விளக்கும் உயர்காப்பியமாகும். குடிமக்களில் ஒருத்தியால் குடும்ப அறம், எப்படிச் செய்ய வேண்டுமென்பதை உலகிற்கு உணர்த்தும் கதையே மணிமேகலையாகும்*

**“மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”**

*என்று பசிப்பிணி போக்கும் வழிமுறையை பறையறைந்து பாடிய காப்பியமாகும். பேச்சு வழக்கு நடையும், இலக்கிய வழக்கு நடையும் இரண்டறக் கலந்த காப்பியமாகும்.*

| | |
|---|---|
| *நூல் பெயர்:-* | *மணிமேகலை* |
| *நூலாசிரியர்:-* | *மதுரை கூல வணிகன் சீத்தலைச் சாத்தனார்* |
| *காலம்:-* | *கி.பி. இரண்டாம் நூற்றாண்டு* |
| *பா:-* | *ஆசிரியப்பா* |
| *பிரிவுகள்:-* | *முப்பது காதைகள் (விழாவறை காதை முதல் பாவை நோற்ற காதை வரை)* |
| *சமயம்:-* | *பௌத்தம்* |
| *பெயர்க்காரணம்:-* | *சமயத்திற்கும் தமிழுக்கும் பிறந்த மணியான (குழந்தை)மேகலை என்கிறார் மது.ச. விமலானந்தம்.* |
| *அடிகள்:-* | *4286 அடிகள்* |

### சிறப்புப் பெயர்கள்:-

*மணிமேகலை துறவு, துறவு காப்பியம், அறக்காப்பியம்.*

**நூல் சிறப்பு:-**

1. *தொல்காப்பியர் கூறும் ‘இயைபு’ என்னும் நூல் வகையைச் சார்ந்தது.*
2. *சிலப்பதிகார கதைத் தொடர்புடையது*
3. *தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம்.*
4. *கிளைக் கதைகள் அதிகம் கொண்ட கதைகளின் களஞ்சியமாகவே காணப்படுகிறது.*
5. *மதுஒழிப்பு, சாதி ஒழிப்பு, சிறை ஒழிப்பு, பரத்தை ஒழிப்பு, கொலை, களவு, காமம் போன்றவற்றை ஒழிக்கச் சொல்லும் சீர்திருத்தக் காப்பியம் மணிமேகலையாகும்.*

## பாத்திரம் பெற்ற காதை

1

மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணல் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மலர்ப் பொய்கையும் தாழ்ந்தனள் நோக்கிக்
காவதம் திரியக் கடவுள் கோலத்துத்
தீவ திலகை செவ்வனந் தோன்றிக்
கலம்கவிழ் மகளிரின் வந்துஈங்கு எய்திய
இலங்குதொடி நல்லாய் யார்நீ என்றலும்,

2

எப்பிறப் பகத்துள் யார்நீ என்றது
பொன்கொடி அன்னாய் பொருந்திக் கேளாய்
போய பிறவியில் பூமியங் கிழவன்
இராகுலன் மனையான் இலக்குமி என்பேர்
ஆய பிறவியில் ஆடலங் கணிகை
மாதவி ஈன்ற மணிமே கலையான்
என்பெயர்த் தெய்வம் ஈங்குஎனைக் கொணரஇம்
மன்பெரும் பீடிகை என்பிறப்பு உணர்ந்தேன்
ஈங்குஎன் வரபுஇதுஈங்கு எய்திய பயன்இது
பூங்கொடி அன்னாய் யார்நீ என்றலும்,

3

ஆயிழை தன்பிறப்பு அறிந்தமை அறிந்த
தீவ திலகை செவ்வனம் உரைக்கும்
ஈங்குஇதன் அயலகத்து இரத்தின தீவத்து

ஓங்குஉயர் சமந்தத்து உச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடிஇணை ஆகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குஉளது ஆதலின்
தொழுதுவலம் கொண்டு வந்தேன் ஈங்குப்
பழுதுஇல் காட்சிஇந் நன்மணிப் பீடிகை
தேவர்கோன் ஏவலின் காவல் பூண்டேன்
தீவ திலகை என்பெயர் இதுகேள்

4

தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்அறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதன் பின்னர்ப்
பண்டைப் பிறவியர் ஆகுவர் பைந்தொடி
அரியர் உலகத்து ஆகுஅவர்க்கு அறமொழி
உரியது உலகத்து ஒருதலை யாக
ஆங்ஙனம் ஆகிய அணியிழை இதுகேள்

5

ஈங்குஇப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமகி என்னும் கொழுநீர் இலஞ்சி
இருதுஇள வேனிலில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்
அந்நாள் இந்நாள் அப்பொழுது இப்பொழுது
நின்ஆங்கு வருவது போலும் நேர்இழை

6

ஆங்குஅதின் பெய்த ஆர்உயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
தான்தொலைவு இல்லாத் தகைமையது ஆகும்
நறுமலர்க் கோதை நின்ஊர் ஆங்கண்
அறவணன் தன்பால் கேட்குவை இதன்திறம்
என்றுஅவள் உரைத்தலும், - இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடும் கூடிக்
கோமுகி வலம்செய்து கொள்கையின் நிற்றலும்

7

எழுந்துவலம் புரிந்த இளங்கொடி செங்கையில்
தொபந்தகை மரபின் பாத்திரம் புகுதலும்.
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை இன்றி மனமகிழ் எய்தி

8

மாரனை வெல்லும் வீர நின்அடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்அடி
பிறர்க்குஅறம் முயலும் பெரியோய் நின்அடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்அடி
எண்பிறக்கு ஒழிய இறந்தோய் நின்அடி
கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய் நின்அடி
தீமொழிக்கு அடைத்த செவியோய் நின்அடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்அடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்அடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல்என் நாவிற்கு
அடங்காது என்ற ஆயிழை முன்னர்,
போதி நீழல் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தித்
தீவ திலகை சேயிழைக்கும் உரைக்கும்:

9

குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவிஅது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்றா நிமிராது

10

புல்மரம் புகையப் புகைஅழல் பொங்கி
மன்உயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசுதலை நீங்கிய அருமறை அந்தணன்
இருநில மருங்கின் யாங்கணும் திரிவோன்
அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாய்ஊன் தின்னுதல் உறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்

வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளம் தருதலின் மன்உயிர் ஓங்கிப்
பிழையா விளையுளும் பெருகியது அன்றோ

11

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக்
கயக்குஅறு நல்அறம் கண்டனை என்றலும்,

12

விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்
திட்டி விடம்உணச் செல்உயிர் போவுழி
உயிரொடு வேவேன் உணர்வு ஒழி காலத்து
வெயில்விளங்கு அமயத்து விளங்கித் தோன்றிய
சாது சக்கரன் தனையான் ஊட்டிய
காலம் போல்வதுஓர் கனாமயக்கு உற்றேன்
ஆங்குஅதன் பயனே ஆர்உயிர் மருந்தாய்
ஈங்குஇப் பாத்திரம் என்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்தி நல்அறம் விளைந்த அதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சிதர் உடுத்து
வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி
வெயில்என முனியாது புயல்என மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லாது அயர்வோர் பலரால்
ஈன்ற குழவி முகங்கண்டு இரங்கித்
தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே
நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்து
அகன்சுரைப் பெய்த ஆர்உயிர் மருந்துஅவர்
முகம்கண்டு சுரத்தல் காண்டல்வேட் கையேன்என,

13

மறந்தேன் அதன்திறம் நீஎடுத்து உரைத்தனை
அறம்கரி யாக அருள்சுரந்து ஊட்டும்
சிறந்தோர்க்கு அல்லது செவ்வனம் சுரவாது

ஆங்ஙனம் ஆயினை அதன்பயன் அறிந்தனை
ஈங்குநின்று எழுவாய் என்றுஅவள் உரைப்ப,

14
தீவ திலகை தன்அடி வணங்கி
மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்திக்
கோமகன் பீடிகை தொழுது வலம்கொண்டு
வான்ஊடு எழுந்து மணிமே கலைதான்
வழுஅறு தெய்வம் வாய்மையின் உரைத்த
எழுநாள் வந்தது என்மகள் வாராள்
வழுவாய் உண்டுஎன மயங்குவோள் முன்னர்
வந்து தோன்றி,
அந்தில் அவர்க்குஓர் அற்புதம் கூறும்

15
இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
அமுத பதிவயிற்று அரிதில் தோன்றித்
தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
அவ்வையர் ஆயினீர் நும்மடி தொழுதேன்
வாய்வ தாக மானிட யாக்கையில்

16
தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்குஈங்கு
அறவண வடிகள் தம்பால் பெறுமின்
செறிதொடி நல்லீர் உம்பிறப்பு ஈங்குஇஃது
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் நீயிரும் தொழும்எனத்
தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்
பழுதுஅறு மாதவன் பாதம் படர்கேம்
எழுகென எழுந்தனள் இளங்கொடி தான்என்.
பாத்திரம் பெற்ற காதை முற்றிற்று.

## 11. பாத்திரம் பெற்ற காதை

### 1. 'யார் நீ' என்றனள்!

*மண்மேகலா தெய்வம் நீங்கின பின்னர், மணிபல்லவத் தீவனை மணிமேகலை சுற்றிப் பார்க்கத் தொடங்கினாள். வெண்மையான மணற்குன்றமும், மலர்விரிந்துள்ள மலர் வனங்களும், குளிர்ச்சியான மலர்ப்பொய்கைகளும் ஆகியவற்றை எல்லாம் மெல்லென நடந்து சென்றவளாக நோக்கினாள். அங்ஙனம், அவள் ஒரு காவத தூரம் வரை*

*பார்த்தவாறே சென்றாள், அவ்வேளை, கடவுட் கோலத்துடனே, தீவதிலகை என்பவள் செவ்விதமான முறையிலே வந்து அவள் முன்னர்த் தோன்றினாள். "மரக்கலம் கவிழ்ந்து போகத் தப்பி வந்த ஒரு பெண்ணினைப்போல வந்து இவ்விடத்தை அடைத்திருக்கின்றவளே! தொடி விளங்கும் நல்லவளே! நீதான் யாரோ?" என்று தீவதிலகை கேட்டாள்.*

## 2. என் வரவு இது

*'யார் நீ!' என்று கேட்டனை. அது என்னுடைய எந்தப் பிறப்பகத் தினுள்ளேயோ? பொற்பொடி போன்றவளே! மனம் பொருந்திக் கேட்பாயாக. சென்ற பிறப்பிலே ஒரு நாட்டிற்கு. உரிமையாளனாக இருந்தோனான 'இராகுலன்' என்னும் மன்னகுமாரனை மனைவியாக இருந்தவள் யான் 'இலக்குமி என்பது அப்போது என் பெயர். இப்பிறப்பிலோ! அழகிய ஆடற்கணிகை மாதவி பெற்றெடுத்த மணிமேகலை யான். என் பெயர்த் தெய்வம் இவ்விடத்தே என்னைக் கொணர்ந்து. இந்தப் பெருமைபொருந்திய பீடிகையால். என் பழம்பிறப்பினையும் அறிந்தேன். என் வரவானது இவ்வாறு, யான் அடைந்த பயனும் இதுவாகும் மலர்க் கொடி போன்றவளே! நீ யார்?" என்றாலும் -*

## 3. தீவதிலகை யான்

*மணிமேகலை தன்னுடைய முற்பிறப்பினைப்பற்றி அறிந்திருந்த தனைத் தீவதிலகையும் அறிந்தாள். செவ்வையான தன்டையுடன் அதன்மேற் சொல்லத் தொடங்கினாள். "இந்த மணிபல்லவத்தீவின் அயலிடத்தே இரத்தினத்தீவதம் என்பது உள்ளது. அதனிடத்தேயுள்ள மிகவுயர்ந்த சமந்தகம் என்னும் மலையினது உச்சிமேலாக அறத்திலே நிற்கும் உரிமை உடையவனாகிய புத்ததேவனின் இணையடிகளாகிய, பிறவி என்னும் பெருங்கடலினின்னும் தன்னை அடைந்தாரைக் கரைசேர்விக்கின்றன, அறத்துடன் கூடிய மரக்கலமாகிய பாதபீடிகை யொன்றும் உள்ளது. அதனை வலங்கொண்டு பணிந்தபின், யான் இவ்விடத்துக்கு வந்தேன். பழுதற்ற தோற்றத்தினையுடைய, நன்மை தருகின்ற. இந்த மாணிக்கப் பீடிகையைத் தேவர்கோமானின் ஏவலினாலே காவல்செய்திருக்கும் பணியினை மேற்கொண்டவள் யான்! என் பெயர் தீவதிலகை" என்றாள்.*

## 4. தீவதிலகையின் போற்றுதல்

*தருமத் தலைவனாகியவன் புத்ததேவன். அவன் தரும நெறிகளில் தலைமையுடையதாகக் கூறியது பெருமைமிக்க நல்லறத்தினைப் பேணிவருதலாகும். அதனின்றும் தவறுதலற்ற நோன்பினை உடைய வர்கள் மட்டுமே இப்பாதபீடிகையைக் காண்பதற்கு, கைதொழுவதற்கும்*

உரியவர் ஆவர் ஆங்ஙனம், அவர்கள். வந்து தரிசித்த பின்னர், தம்முடைய படிமபிறப்பினையும் அவர்கள் உணர்வார்கள். அத்தகைய தன்மை உடையவர்கள் இவ்வுலகத்திலே மிகவும அரியரேயாவர். அப்படிப்பட்ட அரிய நிலையினர் ஆகியவர்கட்கே தருமபதமும் உரிமை உடையதாகும் என்பது உறுதி. அத்தகைய நிலையினள் ஆகிய அணியிழையே! யான் கூறப்போகின்ற இதனையும் கேட்பாயாக.

## 5. அமுதசுரபி தோன்றும்

இவ்விடத்திலே, பெரும் புகழினையுடைய இப்பீடிகையின் முன்பாக இருப்பது. நீர் நிறைந்துள்ள பெரியதான குவளை மலர்களும், நெய்தல் மலர்களும் நிறைந்து, தம்முட் கலந்தனவாகத் திகழ்கின்ற கோமுகி என்னும் பொய்கையாகும். அதனிடத்தே -

இளவேனிற் பருவமாகிய சித்திரை வைகாசி ஆகிய மாதங்களுள். சூரியன் மிகவும் வெப்பத்தைச் செய்கின்ற மாதம் வைகாசியாகும். அதன்கண் இருபத்தேழு நட்சத்திரங்களுள் கார்த்திகை முதலாகத் தொடங்கும் பதின் மூன்றும் கழிந்தபின் பதினான்காவதாயிருப்பதும், இருபத்தோழின் நடுநட்சத்திரமாகியதுமான. விசாக நட்சத்திரத் தன்று, அமுதசுரபி வெளிப்பட்டுத் தோன்றும். போதி நாதானாகிய புத்தபெருமான் தோன்றிய நாளும் அதே சைவசாக பௌர்ணமை நாள்தான் அவனைப் போன்றே, அதுவும் அந்நாளிலே பொருந்திக் தோன்றும். அஃது ஆபுத்திரன் என்பவனிடமிருந்து பெருமை மிகுந்த பாத்திரமாகும். இளங்கொடியே! இன்னமும் கேட்பாயாக.

## 6. இந்நாள் அந்நாள்

அந்த வைசாக பௌர்ணமி நாளும் இன்றேயாகும். அமுதசுரபி வரும் வேளையும் இதுவேதான் நேரிழையே! அது நின்னிடத்திற்கே வருவது போன்றிருக்கின்றது. அதிற் பெய்த ஆருயிர்க்கு மருந்தாகிய உணவானது. எடுக்க எடுக்கப் பெருகிக் கொண்டேயிருக்கும். வாங்கு பவர்களின் கைகள் வாங்கி வாங்கி ஓயமாட்டாது வருந்துவனவாகுமே அல்லாமல். அது தன்னளவிலே எப்பொழுதும் குறைவில்லாததாகவே விளங்கும். நறுமலர்க் கோதையே! நினது ஊரிடத்தேயுள்ள அறவணனிடத்தே. இதன் வரலாற்றைக் கேட்பாயாக.

## 7. பாத்திரம் பெற்றது

இவ்வாறு உரைத்தனள் தீவதிலகை. மணிமேகலையும் அதனை அடைய விரும்பினாள். மிகப் பெருமையுடைய பாத பீடிகையினைத் தொழுது வணங்கியவாறே, தீவதிலகையோடு கூடிக் கோமுகியையும் வலம் செய்தாள். பின், நியமத்தோடும் நின்று கொண்டிருந்தாள். அமுதசுரபியும் அப்போது பொய்கையினின்றும் நீர்மேல் எழுந்தது.

*வலஞ் செய்து நின்ற மணிமேகலையின் கையிலே, தொழுது போன்று தற்கான சிறப்பினையுடைய அப்பாத்திரமும், சென்று புகுந்தது.*

## 8. வணக்கமும் வாழ்த்தும்

*அந்தப் பாத்திரத்தை பெற்ற பசுமையான கொடியினையுடைய இளையோளான அவள், அளவற்ற மனமகிழச்சி அடைந்தனள். "மாரனை வெற்றிகொள்ளும் வீரனே! தீய நெறிகளான கடும்பகைகளை நீக்கியோனே! ஏனையோருக்கும் அறவாழவு வாய்ப்பதற்கு முயல்கின்ற பெரியோனே! சுவர்க்கத்தையும் விரும்பாத தொன்மையாளனே! மக்களின் எண்ணங்கள் பின்னடையும் படியாக அதற்கு எட்டாத மேம்பட்ட நிலையினை அடைந்திருப்பவனே! ஞானக்கண்களைப் பிறருக்கு அளிக்கின்ற அருள்நோக்கமுடைய மெய்ஞ்ஞான மூர்த்தியே! தீயோரின் தீய பேச்சுக்களைக் கேட்க மறுத்த செவிகளை உடையோனே! வாய்மையான பேச்சுக்களால் சிறப்புற்ற நாவினை உடையோனே! பாவிகளின் துயரங்களால் நீங்குமாறு அவர்களிடையேயும் செல்லுகின்ற அருளாளனே! நகரங்களின் துயரங்களையும் போக்குபவனே! நின் திருவடிகளை வணங்குதல் செய்தலே என்னல் இயலாது வாழ்த்துதல் என்பது என் நாவிற்கும் அடங்காத செயலாம்" என்று, போதிமாத வனைப் போற்றித் துதித்தனள் மணிமேகலை. அப்போது அவள் முன்னர் -*

## 9. பசி தீர்த்தோர்

*புத்தர்பிரானை மணிமேகலை போற்றுதலைக் கண்ட தீவதிலகையும், போதி நீழலுடனே பொருத்தித் தோன்றும் நாதனின் பாதங்களை உலகெங்கும் துயர்கெட அருளுமாறு வேண்டிப் போற்றினாள். அதன்பின் சொல்வாள்.*

*'பசிப்பிணி, ஒருவரின் குடிப்பிறப்பினால் வந்த தகுதியை அழித்து விடும்; தூய்மையான இயல்புகளைச் சிதைத்துவிடும் வாழ்வுக்குப் பற்றுக்கோடகப் பற்றிக்கொண்ட கல்வியாகிய பெரிய புணையையும் போக்கிவிடும். நாணமாகிய அணியினையும் நீக்கிவிடும். மேன்மை பொருந்திய அழகினை எல்லாம் சீர்குலைக்கும். பூண் அணிந்த மூலை களையுடைய மனைவியரோடும். கூடிப் பிறரின் கடைவாயிலிலே சென்று இரந்து நிற்கவும் செய்யும். அத்தகையை பாவியது கொடுமை யைப் போக்க வேண்டும். அங்ஙனம் போக்கியவர்களைப்பற்றி எழும் புகழ்மொழிகளை அளவிட்டுக் கூறுவதற்கு என் நாவும் நிமிராது, அத்துணை அளவிறந்த புகழுடைய செயல் அதுவாகும்.*

## 10. நாய்க்கறி தின்றவன்

*புல்லும் மரங்களும் வெம்மையினாலே கருகிப் புகையுமாறு எங்கணும் அழல் புகைந்த பொங்கியது. அதனால் நிலைபெற்ற*

உயிர்கள் அனைத்தும் பசியினால் மடியலாயின. மழைவளமும் அறவே நீங்கிப் போயிருந்தது. அரசப் பொறுப்பினின்றும் விலகி, அரிய மறையோதும் அந்தணனாகிய விசுவாமித்திரன். இப்பெரிய உலகத்து எப்புறத்தும் சுற்றித் திரிபவனானான். நீக்குவதற்கும் அரியதாகிப்போன பெரும்பசியினைப் போக்குவதற்கும் எதனையும் காணாதவனுமாயினான். பொருந்தாத நாயின் ஊனையும் தின்னுவதற்குத் தொடங்கினாள். தின்னுமவன் முதற்கண் தேவபலியினைச் செய்தான். அப்போது அவன் முன்பாக வானவர். கோமானாகிய இந்திரன் தோன்றி, மழை வளத்தினைத் தந்து உதவினான். அதனால், மன்னுயிர்கள் மீண்டும் பெருகலாயின் தப்பாத விளை பொருள்களும் உலகில் மிகுந்தன. இஃது உண்மை அல்லவோ?

## 11. நல்லறம் காண்பாய்

கைம்மாறு செய்யும் சக்தி உடையவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பவர் அறத்தினை விலைகூறி விற்பவராவர் கைம்மாறு செய்வதற்கும் இயலாத ஏழைகளின் பெரும் பசியினைப் போக்கிபவரே உண்மையாக அறம் செய்பவர்கள் மெய்ந்நெறியோடு. கூடிய வாழ்க்கை என்பதும் கொடுத்து மகிழும் அத்தகையோரின் வாழ்க்கையேயாகும். அணுச்செறிந்த இந்த உலகத்திலே வாழ்பவர்களுக்கு, எல்லாம் உணவு கொடுத்தவர் எவரோ, அவர்தாம். உயிர் கொடுத்தவரும் ஆவர். அப்படி உயிர்வழங்குதலை மேற்கொண்ட உறுதியுடையவள் நீயும் ஆயினை கலக்க மற்ற நல்லறத்தினையும் அறிந்தனை!" என்றனள் தீவதிலகை, அவள் அங்ஙனம் சொல்லலும், மணிமேகலை கூறுவாள்.

## 12. அறத்தின் பயன்

"முன்பிறப்பிலே யான் நேசித்த காதலனாகிய இராகுலன் திட்டிவிடம் தீண்டப்பெற்று இறந்தனன். அவன் உயிர் போன காலத்திலே நெருப்பிலே குதித்து வேகின்றவள், என் உணர்வுகள் ஒடுங்கிய சமயத்திலே, உச்சிப் பொழுதிலே வந்து தோன்றிய சாதுசக்கரனை யான் முன்னர் உணவூட்டிய காலத்தைப் போன்றதோர் கனவினை உடையவளாகிய மயக்கமும் அடைந்தேன். என் உயிரும் அப்போது பிரிந்தது. அந்தக் கனவின் பயனே போலும், அரிய உயிர்களைக் காக்கும் மருந்தாக, இவ்விடத்து இப்பாத்திரமும் என் கையிலே வந்து சேர்ந்தது!"

## 13. தாயாகப் பேணுவேன்

சிதைவுற்றுப் போன துணியை உடுத்துக்கொண்டு வயிற்றைக் காய்கின்ற பெரும்பசியானது துன்புறுத்துவதற்காகப் பெரிதும் இரக்கப்படும் வெயிலாயிற்றே என வெறுத்து இராமலும்,

மழையாயிற்றே எனச் சோம்பி இரமலும்; அவர்தம் கடைவாயில்களிலே சென்று நின்று, துன்பம் மிகுந்து முன்பிறவிகளில் அறவழிகளிலே முற்றவும் நிலை பெற்றிராத காரணத்தை நினைத்து அயர்கின்றவர் பலராவர். தான் பெற்றெடுத்த குழந்தையின் பசியால் வாடிய முகத்தைக் கண்டதும் அதற்கு இரங்கி இனிதான பாலைச் சுரப்பவள் தாய், அத்தாயின் முலைபோன்றே சுரத்து பெருகி உணவை உதவுவது இத்தெய்வீகப் பாத்திரம், இதன் அகன்ற உள்ளிடத்தே பெய்த ஆருயிரினைப் பேணும் உணவான மருந்து, பசித்தவரின் முகத்தைக் கண்டதும் சுரத்தலைக் காணும் விருப்பமுடையேன் யான்" என்றனன் மணிமேகலை.

"நாவல்" என்றும் பெயருடைய இம் மாபெரும் சம்புத் தீவத்தின் கண்ணே நல்லறத்தை விதைத்து விளைந்த அதன் பயனாகிய செல்வத்தை அநுபவித்துக் கொண்டிருப்போரின் வீடுகளிலே-

## 14. மறந்தேன் ஒன்று!

"அதன் திறத்தினை விளக்குவதற்கு யான் மறந்து விட்டேன், நீ எடுத்துக் கூறினாய். அறம் ஒன்றே காட்சியாக அருள்சுரந்து அனைவரையும் அது உண்பிக்கும். சிறப்புடையவர்களுக்கு அல்லாமற் பிறருக்கு அது நல்லபடியாகச் சுரப்பதும் செய்யாது. அதன் பயன் அவ்வாறு என அறிந்தவளும் ஆயினை. இப்போது அதனைச் செயலாற்றவும் எண்ணினை. ஆதலின் இவ்விடத்தே நின்றும் நின் நகருக்கு இனிச் செல்வாயாக" என்றனாள் தீவதிலகை.

## 15. புறப்பட்டாள்

தீவதிலகையின் திருவடிகளை வணங்கி மணிமேகலை விடை பெற்றாள். மிக்க சிறப்புடைய அமுதசுரபியைத் தன் மலர்க்கையிலே ஏந்தியவளாக, வானத்து வழியாக மேலெழுந்து புகாரை நோக்கியும் புறப்பட்டாள்.

## 16. அறபுதம் சொல்வாள்!

"உரைக்கும் சொற்களிலே பிறழ்தலற்ற மணிமேகலா தெய்வம், உறுதியாகக் கூறியதான ஏழாம் நாளும் வந்தது. என் மகள் இன்னமும் வராமலிருக்கின்றானே! தெய்வத்தின் சொற்களும் பிழையாதல் உண்டுபோலும்!" என எண்ணிக் கலக்கங் கொண்டிருந்தாள் மாதவி. அவள் முன்பாக, மணிமேகலையும் அப்போது வந்து தோன்றினாள். அவள் துயரையும் சுதமதியின் கவலையினையும் போக்கினாள். பின்னர், அவ்விடத்தே, அவர்களுக்கு ஓர் அற்புதத்தையும் சொல்லலானாள்!

## 17. பழம்பிறப்பு உரைத்தல்

"இரவிவன்மன் என்பவனுடைய ஒப்பற்ற பெருமையுடைய புதல்வியே! குதிரைப்படையினை உடைய துச்சயன் என்பவனின் தேவியே! அமுதபதியின் வயிற்றிடத்தே அருமையாகத் தோன்றி அப்போது என் தமக்கையராயிருந்த தாரையும் வீரையும் என்போரே! இப்பிறப்பிலே நீர் என் தாய்மார் ஆயினிர்: நும் திருவடிகளை யான் வணங்குகின்றேன்" என மணிமேகலை, மாதவி சுதமதி ஆகியோரை வணங்கினாள்.

## 18. உம் பிறப்பு அறுக!

இந்த மானிட யாக்கையிலேயே தீவினைகளை அறுத்துப் பேறெய்தும் தகைமை நுமக்கும் வந்து வாய்ப்பதாக அதற்குச் செய்வதற்கான தவநெறிகளை இவ்விடத்தே அறவணவடிகளிடத்தே கேட்டு அறிந்துகொண்டு, அதன் படியே செய்வீராக செறிந்த வளையணிந்த நல்லோர்களே! உம் பிறப்பின் தன்மை இதுவே யாகும்.

## 19. பாதம் பணிவோம்!

"இப்பெருஞ் சிறப்புடைய பாத்திரம் அமுதசுரபி என்பது. ஆபுத்திரன் என்பானின் கையிலே முன்னர் இருந்து. இதனை நீவிரும் வணங்குவீராக," என, அதனையும் அவர்கட்குக் காட்டியச் சொல்ல, அவர்களும் அங்ஙனமே அதனை வணங்கிப் போற்றினர்.

தூய்மையாகப் பேசுபவரான அத்தாய்மார் இவருடனும், "குற்றம் அறுத்த மிக்க பெருந்தவன் ஆகியே அறவண அடிகளின் பாதங்களைப் பணிந்து வருவோம். எழுங்கள்" எனக் கூறியவாறே, மணிமேகலையும் அறவணர்பாற் செல்லுவதற்கு எழுந்தனள் - என்க.

## 3. பெரியபுராணம்

சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாவது திருமுறையாக வைத்துப் போற்றப்படுவது சேக்கிழாரின் பெரியபுராணமாகும். பெருங்காப்பிய இலக்கணங்கள் அனைத்தும் கொண்ட சைவசமயக் காப்பியம். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சுந்தரர் இயற்றிய திருத் தொண்டத்தொகையை முதன் நூலாகக் கொண்டு பாடப்பட்ட நூலாகும். சுந்தரரைக் காப்பியத் தலைவராக கொண்டும், அவர் போற்றி வழிபட்ட சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றினையும் கூறும் நூலாகும்.

### நூலாசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| நூலாசிரியர்:- | சேக்கிழார் |
| நாடு:- | தொண்டைநாடு |
| ஊர்:- | குன்றத்தூர் |
| இயற்பெயர்:- | அருண்மொழித்தேவர் |
| பணி:- | இரண்டாம் குலோத்துங்கச் சோழனிடம் அமைச்சர் |
| சிறப்புப்பெயர்:- | உத்தமச் சோழப்பல்லவன், தொண்டர்சீர் பரவுவார். |
| காலம்:- | 12-ஆம் நூற்றாண்டு |
| நூல்பிரிவு:- | இரண்டு காண்டங்கள் |
| | முதல் காண்டம் - ஐந்து சருக்கங்கள் |
| | இரண்டாம் காண்டம் - எட்டு சருக்கங்கள் |
| பாடல்கள்:- | 4286 செய்யுள்கள் |
| பா:- | விருத்தப்பா |
| சேக்கிழார் இட்டபெயர் சிறப்புப் பெயர்:- | திருத்தொண்டர் மாக்கதை |
| நூல் தொடக்கம்:- | இறைவனே ‘உலகெலாம்’ என அடி எடுத்துக் கொடுத்ததாகக் கூறுவர். |
| நூலின் சிறப்புப் பெயர்:- | தொண்டர் புராணம். |

*சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை (பதினொரு பாடல்கள்)யை முதன் நூலாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி (எண்பத்தி ஒன்பது பாடல்கள்)யை வழி நூலாகவும் கொண்டு பாடப்பட்ட சார்பு நூலாகும்.*

*பெரியபுராணத்தில் தனி அடியார் 63 பேர், தொகையடியார் ஒன்பது பேரின் வரலாற்றினை அழகுற எடுத்துக் கூறும் காவியமாகும். நம்பாடப் பகுதி வெள்ளானைச் சருக்கத்தில் உள்ள கோச்செங்கட் சோழ நாயனார் புராணமாகும்.*

*அ.ச. ஞானசம்பந்தன் இக்காப்பியத்தை "தமிழ் தேசியக் காப்பியம்" என்று சிறப்பித்துப் பாடினார்.*

## பூசலார் நாயனார் புராணம்

அன்றினார் புரம் எரித்தார்க்கு
ஆலயம் எடுக்க எண்ணி
ஒன்றும் அங்கு உதவாது ஆக
உணர்வினால் எடுக்கும் தன்மை
நன்று என மனத்தினாலே நல்ல
ஆலயம் தான் செய்த
நின்ற ஊர்ப் பூசலார்தம்
நினைவினை உரைக்கல் உற்றார்.

1. உலகினில் ஒழுக்கம் என்றும் உயர்
    பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான்
    மறை விளங்கும் மூதூர்
குல முதல் சீலம் என்றும்
    குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி
    நிகழ் திருநின்ற ஊராம்.

2. அருமறை மரபு வாழ
    அப்பதி வந்து சிந்தை
தரும் உணர்வான எல்லாம்
    தம்பிரான் கழல்மேல் சார
வருநெறி மாறா அன்பு வளர்ந்து
    எழ வளர்ந்து வாய்மைப்
பொருள் பெறு வேதநீதிக் கலை
    உணர்பொலிவின் மிக்கார்

3 அடுப்பது சிவன்பால் அன்பர்க்காம்
பணி செய்தல் என்றே
கொடுப்பது எவ்வகையும் தேடி அவர்
கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்து
உறைவதற்கு ஓர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார் இரு
நிதி இன்மை எண்ணார்.

4 மனத்தினால் கருதி எங்கும்
மாநிதி வருந்தித் தேடி
எனைத்தும் ஓர் பொருட்பேறு இன்றி
என் செய்கேன் என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து
நிகழ்வுறு நிதியம் எல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச்
சிந்தையால் திரட்டிக் கொண்டார்.

5 சாதனத் தோடு தச்சர்
தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம் செய் நலம்
பெறு நல் நாள் கொண்டே
ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை
பாரித்து அன்பால்
காதலில் கங்குல் போதும்
கண்படாது எடுக்கல் உற்றார்.

6 அடிமுதல் உபானம் ஆதி
ஆகிய படைகள் எல்லாம்
வடிவுறும் தொழில்கள் முற்ற
மனத்தினால் வகுத்து மான
முடிவுறு சிகரம் தானும்
முன்னிய முழத்தில் கொண்டு
நெடிது நாள் கூடக் கோயில்
நிரம்பிட நினைவால் செய்தார்.

7 தூபியும் நட்டு மிக்க
சுதையும் நல்வினையும் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில்
சூழ் மதிலும் போக்கி

வாவியும் தொட்டு மற்றும்
வேண்டுவ வகுத்து மன்னும்
தாபரம் சிவனுக்கு ஏற்க விதித்த
நாள் சாரு நாளில்,

8 காடவர் கோமான் கச்சிக்
கற்றளி எடுத்து முற்ற
மாடெலாம் சிவனுக்கு ஆகப் பெருஞ்
செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியாதாரைத் தாபிக்கும்
அந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார்
இரவிடைக் கனவில் எய்தி.

9 நின்றவூர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்து நாளை
நாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து
பின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில் கொண்டருளப் போந்தார்.

10 தொண்டரை விளக்கத் தூயோன் அருள்
செயத் துயிலை நீங்கித்
திண்திறல் மன்னன் அந்தத்
திருப்பணி செய்தார் தம்மை
கண்டு நான் வணங்க வேண்டும்
என்று எழும் காதலோடும்
தண்டலைச் சூழல் சூழ்ந்த
நின்றவூர் வந்து சார்ந்தான்.

11 அப்பதி அணைந்து பூசல் அன்பர்
இங்கு அமைத்த கோயில்
எப்புடையது என்று அங்கண்
எய்தினார் தம்மைக் கேட்கச்
செப்பிய பூசல் கோயில் செய்தது
ஒன்று இல்லை என்றார்
மெய்ப் பெரு மறையோர் எல்லாம்
வருக என்று உரைத்தான் வேந்தன்.

12 பூசுரர் எல்லாம் வந்து
புரவலன் தன்னைக் காண
மாசிலாப் பூசலார் தாம் யார்
என மறையோர் எல்லாம்
ஆசில் வேதியன் இவ்வூரான் என்று
அவர் அழைக்க ஓட்டான்
ஈசனார் அன்பர் தம்பால்
எய்தினான் வெய்ய வேலான்.

13 தொண்டரைச் சென்று கண்ட மன்னவன்
தொழுது நீர் இங்கு
எண் திசை யோரும் ஏத்த எடுத்த
ஆலயம் தான் யாது இங்கு
அண்டர் நாயகரைத் தாபித்து அருளும்
நாள் இன்று என்று உம்மைக்
கண்டடி பணிய வந்தேன் கண்ணுதல்
அருள் பெற்று என்றான்.

14 மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்
தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாகக் கொண்டே
எம்பிரான் அருள் செய்தாரேல்
முன்வரு நிதி இலாமை
மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம் என்று சிந்தித்து எடுத்தா
வாறு எடுத்துச் சொன்னார்.

15 அரசனும் அதனைக் கேட்டு அங்கு
அதிசயம் எய்தி என்னே
புரையறு சிந்தை அன்பர் பெருமை
என்று அவரைப் போற்றி
விரை செறி மாலை தாழ
நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானையோடு மீண்டு
தன் மூதூர் புக்கான்.

16 அன்பரும் அமைத்த சிந்தை
ஆலயத்து அரனார் தம்மை
நன் பெரும் பொழுது
சாரத் தாபித்து நலத்தினோடும்

பின்பு பூசனைகள் எல்லாம் பெருமையில்
பல நாள் பேணிப்
பொன் புனை மன்றுளாடும்
பொற்கழல் நீழல் புக்கார்.

17 நீண்ட செஞ் சடையினார்க்கு
நினைப்பினால் கோயில் ஆக்கி
பூண்ட அன்பிடையறாத பூசலார்
பொற்றாள் போற்றி
ஆண்டகை வளவர் கோமான்
உலகுய்ய அளித்த செல்வப்
பாண்டிமா தேவியார் தம்
பாதங்கள் பரவல் உற்றேன்.

## பொருள்

1. *பகைவர்களது முப்புரங்களைய மெரித்தருளிய சிவபெருமானுக்கு ஆலயஞ்சமைக்கக் கருதி (அதற்கு வேண்டிய உபகரணங்கள்) ஒன்று முதவாதிருக்க பின்பு தமது மெய்யுணர்வினால் சமைத்தலே நன்றென்று கருதி மனத்தினால் சிறந்த சிவாலயங்கட்டிய திருநின்றவூரில் தோன்றிய பூசலார் நாயனாரது மானசத்திருத் தொண்டின் றன்மையைச் சொல்லுவோம்.*

2. *நிலவு நல்லொழுக்கங்களனைத்தும் நாள்தோறும் சிறந்தோங்குகின்ற பெரிய தொண்டைவள நாட்டிலே நன்மைமிக்க சிறப்பினாலுயர்ந்த நான்கு வேதங்களும் பொலிந்து விளங்கும் பழைய ஊராவது (யாதெனின்) குலவொழுக்க முதலிய நல்லொழுக்களனைத்தையும் எக்காலத்துங்குறைவில்லாது விருத்தியாகின்ற வேதியர்களது நற்கொள்கைகள் விளங்கப்பெற்ற செல்வங்கள் நிறைந்தோங்குந் திருநின்றவூராகும்.*

3. *அருமையாகிய வேதியர்குலம் வாழும்படி அத்திருநின்றவூரில் ஆவதரித்து மனத்திற்றோன்றும் உணர்வனைத்துஞ் சிவபெருமான் திருவடிகளிற் சாரும்பம், வருகின்ற நன்னெறியினின்று நீங்காத பேரன்பு வளர்ந்தோங்க வளர்ந்து, மெய்ப் பொருளையுணர்தற்குரிய வேதமுதலிய கலைஞானகங்களை யுணரத்தக்க சிறப்பில் மிக்கவராயினார்.*

4. *தடுக்கடுத்த முறையாவது சிவபெருமானடியார்களுக்கு இசைத்த திருப்பணியைச் செய்தலேயென்று கருதி கொடுக்கத்தக்க பொருள் களை எவ்வாறாயினுந் தேடி அவ்வடியார்கள் பெரும்படி. கங்கை*

*நதி தங்கிய சடை முடியுடைய சிவபெருமான் மகிழ்ந்தெழுந் தருளுதற்கு ஒரு திருக்கோயில் கட்டுவதை மனதிற்கொண்டார் அதற்கு வேண்டிய பொருள் முதலிய கருவிகளின்மையை யெண்ணாதவராகிய அந்நாயனார்.*

5. *திருக்கோயில் கட்ட மனத்தில் சிந்தித்து (அதற்கு வேண்டிய) மிக்க பொருட்களை கஷ்டப்பட்டுத்தேடி, அதனால் சிறிதும் பொருள் பெறுதலில்லாமல் இதற்கு யாது செய்வேனென்று வருந்தி மனத்தினால் கட்ட விரும்பிப் பொருந்திய திரவியங்களைனைத்துந் திணையளவாகத் தேடிச் சிந்தையினால் சேர்த்து வைத்துக் கொண்டார்.*

6. *வேண்டிய உபகரணங்களுடன் சிற்பங்களையும் மனத்தினால் தேடிச் சிவபெருமானுக்கு ஆலயங்கட்டுதற்குரிய நன்மைமிக்க சுபதினங்குறித்துச் சிவாகம விதிப்படி விரும்பி அடிகோல் அன்புடன் பெருவிருப்பினால் இரவிலும் உறக்கமின்றி கட்டத் தொடங்கினார்.*

7. *அடிநிலை முதல் உபானமாதியகவுள்ள அடுக்குளனைத்தும் அழுகுமிக்க சிறப்த் தொழில்கள் நிரம்ப மனத்தினால் செய்து பெருமை மிக்க சிற்பத் தொழில்கள் நிரம்ப மனத்தினால் செய்து, பெருமை மிக்க சிகரத்தைக் கருதிய முழுவளகாகக் கொண்டு ஆலயங்கட்டி முடியப் பலநாள் செல்லும் படி நினைவினால் செய்தருளினார்.*

8. *ஸ்தூயியும் நிறுத்தி, மிக்க கதை தீற்றுதலாகிய நல்ல தொழில் களைச் செய்து, கிணறு எடுத்து, அருகில் திருக்கோயிலைச் சூழ்ந்த திருமதிலுங் கட்டினார். திருக்குளமெடுத்து இன்னும் வேண்டியவை களை செய்தமைத்து, சிவபெருமானுக்கு கேற்க நிலை பெற்ற பிரதிஷ்டை செய்தற்கு விதித்த சுபதினம் வரும் பொழுது.*

9. *காடவ மன்னராவர் காஞ்சிபுரத்திலே கருங்கல்லினால் ஒரு சிவாலயங்கட்டு வித்து அவ்வாலயத்தினருகிலெல்லாம் சிவபெருமானுக்காக (மடம் - தடம் - தண்ணீர்ப் பந்தல் - யாக சாலை முதலிய) பெருஞ் சிறப்புக்களமைத்தவராய் விஷ்ணுவினால் தேடிக் காணப்பட்டவரால் சிவபெருமானைப் பிரதிஷ்டை செய்ய நிச்சயித்திருந்த அச்சுபதினத்திற்கு முன்னாளிரவில் இதழலாந்த கொன்றைமலர் மாலையை யணிந்த சிவபெருமான் (அவ்வரசருடைய) கனவினிலெழுந்தருளி.*

10. *திருநின்றவூரில் வாழும் பூசல் என்னும் ஒரு அன்பன் அநேகநாள் சிந்தித்து கட்டிய நன்மை மிக்க ஆலயத்தில் நாளைக்கு நாம்*

*எழுந்தருளுவோம் ஆதலால் நீ இங்குப் பிரதிஷ்டை செய்யக் கருதிய செயலை நாளையொழிந்து பின்பு மற்றொரு நாளில் வைத்துக் கொள்ளக் கடவாய் என்றளிச் செய்து, கொன்றை மாலையை யணிந்த நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமான் அப்பூசலார் நாயனாரது இருதலையாததில் எழுந்தருளும் பொருட்டு மறைந்தருளினார்.*

11. *சிவபெருமான் திருத்தொண்டராகிய பூசலார் நாயனாரது (அன்பின் நிறத்தை) விளக்கும் பொருட்டு அருளிச் செய்து மறைந்தருள, மிக்கவல்லமை பொருந்திய காடவ மன்னராவர் விறக்கதினின்றி நீங்கி அத்தகைய திருப்பணிசெய் பூசலார். நாயநாரை அடியேன் தரிசித்து வணங்க வேண்டுமென்று எழுந்த பெருவிருப்போடும் சோலைகள் சூழ்ந்த திருநின்றவூரை வந்தடைந்தார்.*

12. *அத்திருநின்றவூரையடைந்து அங்குள்ளவர்களைப் பார்த்து பூசலார் நாயனார். இங்கு கட்டிய திருக்கோயில் எங்கிருக்கிற தென்று கேட்க (அவர்கள் அவரைப் பார்த்து நீர் சொல்லிய பூசலார் நாயனார் கட்டிய கோயில் இங்கு ஒன்றுமில்லை யென்றார்கள் (அப்பொழுது) அரசர், மெய்ம்மை பொருந்திய சிறந்த வேதியர்களனைவரும் வரக்கட்வர்களென்று அழைத்தார்.*

13. *அவ்வாறே வேதியர்களனைவரும் வந்து காடவ மன்னனைக் காண (அரசர் அவர்களைப் பார்த்துக்) குற்றமற்ற சிறப்பினையுடைய பூசலார் நாயனார் யாவர் என்று வினவினார். வேதியர்களனை வரும் குற்றமற்ற அவ்வேதியர் இவ்வூரார் என்று சொல்ல, அவரை அழைக்க வொட்டாமல் கொடிய வேற்படையையுடைய காடவ மன்னர் சிவபெருமானடியவராகிய அப்பூசலார் நாயனாரிடம் சென்றார்.*

14. *திருத்தொண்டராகிய பூசலார் நாயனரை போய்ப் பார்த்த அரசர் வணங்கி, எட்டுத் திக்கிலுள்ளவர்களுத்துதிக்கும்படி தேவரீர் இங்கு கட்டிய ஆலயம் யாது? தேவர்கள் நாயகராகிய சிவபெருமானைப் பிரதிஷ்டை செய்யும் நான்னாள் இன்றேயென்று அவ்வெம்பெருமானது திருவருளைப் பெற்று உம்மைத் தரிசித்து திருவடியை வணங்க வந்தேனன்று கூறினார்.*

15. *இவ்வாறு காடவ மன்னர் சொல்லக் கேட்ட பூசலார் நாயனார் மயங்கிப் பார்த்து, சிறியேனை யோர் பொருளாகக் கொண்ட சிவபெருமான் இவ்வாறு அருள் செய்தாராயின் முன்னே பெறவேண்டிய திரவிய மில்லாமையால் மனோ பாவனையினால்*

*முயன்று கட்டிய ஆலயம் இத்தன்மையதா மென்று, தாம் மனதினாற் சிந்தித்துக் கட்டிய வகையையெடுத்துக் கூறினார்.*

16. *கடவ மன்னனும் அவ்வார்த்தையைக் கேட்டு அவ்விடத்தில் ஆச்சரியமுற்று குற்ற மற்ற திருவுள்ளத்தையுடைய இம்மெய்யன் பரது பெருமையிருந்தவாறு என்னே! என்று அவரைப் துதித்துப் நறுமணங்கமழும் மலர்மாலை தாழும்படி பூமியில் பொருந்த விழுந்த வணங்கி வெற்றிமுரசனையடைக்குஞ் சேனைகளுடன் திரும்பித் தமது பழமையாகிய நகரத்திற்குச் சென்றார்.*

17. *பூசலார் நாயனாரும் தாம் கட்டிய இருதயாலயத்தில் சிவபெருமானைப் பெருமை பொருந்திய சுபதினத்தினாலே எழுந்தருளப் பிரதிஷ்டை செய்து நன்மை மிக்க பேரன்புடன் பின்பு அருச்சனைகளனைத்தும் பெருமையோடு அநேக நாள்கள் விரும்பிச் செய்து, கனகசபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுஞ் (சிவபெருமானது) அழகிய திருவடியையடைந் தருளினார்.*

18. *நீளமாகிய சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமானுக்குச் சிந்தையினால் ஆலயமமைத்துத் தாம் மேற்கொண்ட அன்பை இடைவிடாது செய்தருளிய பூசலார் நாயனாரது பொன்மயமாகிய திருவடிகளைத் துதித்து, ஆண் தன்மையுடைய சோழர் பெருமாள் உலகத்தாருய்யும்படி பெற்றருளிய திருவருட் செல்வத்தையுடைய மங்கையர் கரசியாரது திருவடிகளைத் துதித்துத் தொடங்கினேன்.*

19. *மங்கையர்களுக்கு ஒப்பற்ற அரசியாயுள்ளவரும் எங்கள் குலதெய்வமாகவுள்ளவரும் சோழர் பெருமானுடைய சிறந்த குலத்திற்கு கொழுந்து போல்பவரும் வளையலை அணிந்த திருக்கரத்தையுடைய மானியென்னுந் திருநாமமுடைய வரும் செந்தாமரை மலரில் வாழும் இலட்சுமி போன்றவரும் பாண்டிய நாட்டையரசாளும் பாண்டியர்களது குலத்திற்கு நேர்ந்த (சமண சமயச் சார்பாகிய) பெரும்பழியைத் தீர்த்தல்*

# 3. கம்பராமாயணம்

*பிற்காலத் தமிழ்க் காப்பியங்களுள் பெரிய இலக்கியம் கம்ப ராமாயணமாகும். உலக அரங்கினில் தமிழின் பெருமையை பறை சாற்றிய தலை சிறந்த நூல். கம்பராமாயணம் பிற உலக மொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் கூறப்படும் அளவிற்கு சிறப்பு வாய்ந்த நூலாகும். வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தமிழ் மொழியின் பண்பாட்டிற்கும் மரபிற்கும் ஏற்ப கதையின் போக்கு மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. தெளிவான நடையில் அழகு தமிழில் படைத்த அற்புதக் காப்பியமாகவே கம்பராமாயணம் திகழ்கிறது. தமிழ் இலக்கிய உலகில் உலகமகா கவியாக உயர்ந்து நின்ற கம்பனின் காலமே தமிழ்க் காப்பிய வளர்ச்சியின் தலை சிறந்த காலமாக இன்று வரை போற்றப் பட்டு வருகிறது. இராம பிரானது வரலாற்றை அழகுதமிழில் எழுதிய கம்பர் முதலில் "தன் நூலுக்கு இராம அவதாரம்" என்றே பெயரிட்டு இருந்தார். இக்காப்பிய நூல் இயற்றுவதற்கு உறுதுணையாக இருந்த சடையப்ப வள்ளலை நினைவு கூறும் விதமாக ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் வீதம் சடையப்ப வள்ளலைப் பாராட்டுகிறார்.*

| | |
|---|---|
| *நூலாசிரியர்:-* | *கம்பர்* |
| *பிறந்த ஊர்:-* | *சோழ நாட்டு திருவழுந்தூர்* |
| *தந்தை:-* | *காளிகோவில் பூசாரியான ஆதித்தன்* |
| *மகன்:-* | *அம்பிகாபதி* |
| *மகள்:-* | *காவிரி* |
| *காலம்:-* | *பன்னிரண்டாம் நூற்றாண்டு* |
| *பா:-* | *ஆசிரியப்பா* |
| *பிரிவு:-* | *ஆறு காண்டங்கள்* |
| | *1. பாலகாண்டம் - 22 படலங்கள்* |
| | *2. அயோத்தியாகாண்டம்- 12- படலங்கள்* |
| | *3. ஆரண்ய காண்டம் - 11 படலங்கள்* |
| | *4. கிட்கிந்தா காண்டம் - 17 படலங்கள்* |
| | *5. சுந்தர காண்டம் - 15 படலங்கள்* |
| | *6. யுத்த காண்டம் - 39 படலங்கள்* |
| | *118 படலங்கள்* |

| | |
|---|---|
| *அரங்கேற்றிய இடம்:-* | *திருவரங்கம்* |
| *பாடல்களின் எண்ணிக்கை:-* | *சுமார் 10,589 பாடல்கள்* |
| *கம்பர் இட்டபெயர்:-* | *இராமவதாரம்* |
| *சிறப்புப் பெயர்:-* | *கம்பநாடகம், கம்ப சித்திரம், தோற்று மாக் கதை, இயற்கை பரிணாமம்.* |
| *மூலநூல்:-* | *வால்மீகி இராமாயணம்.* |
| *ஆசிரியரின் சிறப்புப் பெயர்:-* | *கவிச்சக்ரவர்த்தி, கவிப்பேரரசர், கவிக் கோமான், கம்ப நாடுடைய வள்ளல்.* |
| *முதல்படலம்:-* | *ஆற்றுப் படலம்* |
| *இறுதிப் படலம்:-* | *விடை கொடுத்தப் படலம்.* |
| *கம்பரின் பிற படைப்புகள்:-* | *ஏர்எழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி.* |

*கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்ற நூலாகும். அணி, பொருள், நடை ஆகியவற்றினால் சிறந்து விளங்கும் காப்பியமாகும். சொற்சுவையும், பொருட் சுவையும் மிகுந்து தமிழ்ப் பண்பாட்டோடு சிறந்து விளங்கும் காப்பியமாகும். கல்வியில் பெரியவர் கம்பர்; கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்" என்ற புகழ்மொழிக்குச் சொந்தக்காரர் கம்பர்.*

## குகப்படலம்

1. ஆய காலையின், ஆயிரம் அம்பிக்கு
நாயகன், போர்க் குகன் எனும் நாமத்தான்,
தூய கங்கைத் துறை விடும் தொன்மையான்
காயும் வில்லினன், கல் திரள் தோளினான்.

2. துடியன், நாயினன், தோற் செருப்பு ஆர்த்த பேர்
அடியன், அல் செறிந்தன்ன நிறத்தினான்,
நெடிய தானை நெருங்கலின், நீர் முகில்
இடியினோடு எழுந்தாலன்ன ஈட்டினான்.

3. கொம்பு துத்தரி கோடு அதிர் பேரிகை
பம்பை பம்பு படையினன், பல்லவத்து
அம்பன், அம்பிக்கு நாதன், அழி கவுள்
தும்பி ஈட்டம் புரை கிளை சுற்றத்தான்.

4. காழும் இட்ட குறங்கினன், கங்கையின்
ஆழும் இட்ட நெடுமையினான், அரை
தாடி விட்ட செந் தோலன், தயங்குறச்
சூடி விட்ட தொடு புலி வாலினான்.

5. பல் தொடுத்தன்ன பல் சூல் கவடியன்,
கல் தொடுத்தன்ன போலும் கழலினான்,
அல் தொடுத்தன்ன குஞ்சியன், ஆளியின்
நெற்றொடு ஒத்து நெரிந்த புருவத்தான்.

6. பெண்ணை வன் செறும்பின் பிறங்கிச் செறி
வண்ண வன் மயிர் வார்ந்து உயர் முன் கையன்,
கண் அகன் தட் மார்பு எனும் கல்லினன்,
எண்ணெய் உண்ட இருள் புரை மேனியான்.

7. கச்சொடு ஆர்த்த கறைக் கதிர் வாளினன்,
நச்சு அராவின் நடுக்குறு நோக்கினான்,
பிச்சராம் அன்ன பேச்சினன், இந்திரன்
வச்சிராயுதம் போலும் மருங்கினான்.

8. ஊற்றமே மிக ஊனொடு மீன் நுகர்
நாற்றம் மேய நகை இல் முகத்தினான்,
சீற்றம் இன்றியும் தீ எழ நோக்குவான்,
கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினான்.

9. சிருங்கிபேரம் எனத் திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகர் உறை வாழ்க்கையன்,
ஒருங்கு தேனோடு மீன் உபகாரத்தன்,
இருந்த வள்ளலைக் காண வந்து எய்தினான்.

### இராமனின் தவச் சாலைக்கு குகன் செல்லுதல்

10. சுற்றம் அப் புறம் நிற்க, சுடு கணை
வில் துறந்து, அரை வீக்கிய வாள் ஒழித்து,
அற்றம் நீத்த மனத்தினன், அன்பினன்,
நல் தவப் பள்ளி வாயிலை நண்ணினான்.

### இலக்குவனிடம் அறிமுகமாதல்

11. கூவாமுன்னம், இளையோன் குறுகி, 'நீ'
ஆவான் யார்?' என, அன்பின் இறைஞ்சினான்;
'தேவா! நின் கழல் சேவிக்க வந்தனென்;
நாவாய் வேட்டுவன், நாய் அடியேன்' என்றான்.

## குகன் வரவு அறிவித்தல்

12. 'நிற்றி ஈண்டு' என்று, புக்கு நெடியவன் - தொழுது, தம்பி,
'கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன்.
நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும். தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை; குகன்
ஒருவன்' என்றான்.

## இராமனைக் கண்டு வணங்குதல்

13. அண்ணலும் விரும்பி, 'என்பால்
அழைத்தி நீ அவனை' என்ன,
பண்ணவன், 'வருக' என்ன,
பரிவினன் விரைவில் புக்கான்;
கண்ணனைக் கண்ணின் நோக்கிக்
கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண் உறப் பணிந்து, மேனி
வளைத்து, வாய் புதைத்து நின்றான்.

## கையுறைப் பொருள்

14. 'இருத்தி ஈண்டு' என்னலோடும்
இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன், 'தேனும் மீனும்
திருத்தினென் கொணர்ந்தேன்; என்கொல்
அமுதினுக்கு அமைவது ஆகத்
திருஉளம்?' என்ன, வீரன்
விருத்த மாதவரை நோக்கி முறுவலன்,
விளம்பலுற்றான்;

## குகன் அன்பை பாராட்டுதல்

15. 'அரிய, தாம் உவப்ப, உள்ளத்து
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்.
உரியன் இனிதின் நாமும்
அமிழ்தினும் சீர்த்த அன்றே?
பரிவினின் தழீஇய என்னின்
பவித்திரம்; எம்மனோர்க்கும்
உண்டனெம் அன்றோ' என்றான்.

16. சிங்கஏறு அனைய வீரன்
பின்னரும் செப்புவான், 'யாம்
இங்கு உறைந்து, ஏறி நீர்க் கங்கை
ஏறுதும் நாளை; யாணர்ப்
பொங்கும் நின் சுற்றத்தோடும்
போய் உவந்து, இனிது உன் ஊரில்
தங்கி, நீ நாவாயோடும்
சாருதி விடியல்! என்றான்.

## குகனின் வேண்டுகோள்

17. கார் குலாம் நிறத்தான் கூற,
காதலன் உணர்த்துவான், 'இப்
பார் குலாம் செல்வ! நின்னை,
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வனேன் யான்,
இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன்; ஆனது, ஐய!
செய்குவேன் அடிமை' என்றான்.

18. கோதை வில் குரிசில், அன்னாள்
கூறிய கொள்கை கேட்டான்;
சீதையை நோக்கி, தம்பி
திருமுகம் நோக்கி, தீராக்
காதலன் ஆகும். என்று,
கருணையின் மலர்ந்த கண்ணன்,
'யாதினும் இனிய நண்ப!
இருத்தி ஈண்டு, எம்மொடு' என்றான்.

19. அடி தொழுது உவகை தூண்ட
அழைத்தனன். ஆழி அன்ன
துடியுடைச் சேனை வெள்ளம்,
பள்ளியைச் சுற்றி ஏவி,
வடி சிலை பிடித்து, வாளும்
வீக்கி, வாய் அம்பு பற்றி,
இடியுடை மேகம் என்ன
இரைத்து அவண் காத்து நின்றான்.

## குகனின் வருந்துதல்

20. 'திரு நகர் தீர்த்த வண்ணம்,
மானவ தெரித்தி' என்ன,

பருவரல் தம்பி கூற,
பரிந்தவன் பையுள் எய்தி,
இரு கண் நீர் அருவி சோர,
குகனும் ஆண்டு இருந்தான், 'என்னே!
பெரு நிலக் கிழத்தி நோற்றும்,
பெற்றிலன் போலும். என்னா.

### கதிரவன் மறைதல்

21. விரி இருட் பகையை ஓட்டி,
திசைகளை வென்று, மேல் நின்று,
ஒரு தனித் திகிரி உந்தி,
உயர் புகழ் நிறுவி, நாளும்
இரு நிலத்து எவர்க்கும் உள்ளத்து
இருந்து, அருள்புரிந்து வீந்த
செரு வலி வீரன் என்னச்
செங் கதிர்ச் செல்வன் சென்றான்.

### இலக்குவனின் காவல்

22. மாலைவாய் நியமம் செய்து
மரபுளி இயற்றி, வைகல்,
வேலைவாய் அமுது அன்னாளும்
வீரனும் விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினர்;
வரி வில் ஏந்திக்
காலைவாய் அளவும், தம்பி
இமைப்பிலன். காத்து நின்றான்.

23. தும்பியின் குழாத்தின் சுற்றும்
சுற்றத்தன், தொடுத்த வில்லன்,
வெம்பி வெந்து அழியாநின்ற
நெஞ்சினன், விழித்த கண்ணன்
தம்பி நின்றானை நோக்கி,
தலைமகன் தன்மை நோக்கி,
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவி சோர் - குன்றின் நின்றான்.

### கதிரவன் தோன்றுதல்

24. துறக்கமே முதல ஆய
தூயன யாவை யேனும்

மறக்குமா நினையல் அம்மா!
வரம்பு இல தோற்றும் மாக்கள்
இறக்குமாறு இது என்பான்போல்
முன்னை நாள் இறந்தான். பின் நாள்,
பிறக்குமாறு இது என்பான்போல்
பிறந்தனன் பிறவா வெய்யோன்.

25. செஞ்செவே சேற்றில் தோன்றும்
தாமரை, தேரில் தோன்றும்
வெஞ் சுடர்ச் செல்வன் மேனி
நோக்கின விரிந்த வேறு ஓர்
அஞ்சன நாயிறு அன்ன
ஐயனை நோக்கி, செய்ய
வஞ்சிவாழ் வதனம் என்னும்
தாமரை மலர்ந்தது அன்றே.

### நாவாய் கொண்டு வரப் பணித்தல்

26. நாள் முதற்கு அமைந்த யாவும்
நயந்தனன் இயற்றி, நாமத்
தோள் முதற்கு அமைந்த வில்லான்,
மறையவர் தொடரப் போனான்,
ஆள் முதற்கு அமைந்த கேண்மை,
அன்பனை நோக்கி, 'ஐய!
கோள் முதற்கு அமைந்த நாவாய்
கொணருதி விரைவின்' என்றான்.

27. ஏவிய மொழிகேளா,
இழி புனல் பொழி கண்ணான்,
ஆவியும் உலைகின்றான்,
'அடி இணை பிரிகல்லான்,
காவியின் மலர், காயா,
கடல், மழை, அனையானைத்
தேவியோடு அடி தாழா,
சிந்தனை உரை செய்வான்;

28. பொய்ம் முறை இலரால்; எம்
புகல் இடம் வனமேயால்;
கொய்ம் முறை உறு தாராய்!
குறைவிலெம்; வலியேமால்;

செய்ம்முறை குற்றேவல்
செய்குதும்; அடியோமை
இம் முறை உறவு என்னா
இனிது இரு நெடிது. எம் ஊர்;
குகன் இருப்பிடத்தில் தங்க வேண்டுகோள்

29. தேன் உள தினை உண்டால்;
தேவரும் நுகர்தற்கு ஆம்
ஊன் உள துணை நாயேம்
உயிர் உள விளையாடக்
கான் உள புனல் ஆடக்
கங்கையும் உளது அன்றோ?
நான் உளதனையும் நீ
இனிது இரு; நட, எம்பால்;

30. 'தோல் உள, துகில்போலும்;
சுவை உள தொடர் மஞ்சம்
போல் உள பரண்; வைகும்
புரை உள கடிது ஓடும்
கால் உள: சிலை பூணும்
கை உள கலி வானின்
மேல் உள பொருளேனும்,
விரைவொடு கொணர்வேமால்;

31. ஐ - இருபத்தோடு ஐந்து
ஆயிரர் உளர், ஆணை
செய்குநர், சிலை வேடர்
தேவரின் வலியாரால்
உய்குதம் அடியேம்-எம்
வைகுதிஎனின் மேல் ஓர்
குடிலிடை, ஒரு நாள், நீ
வாழ்வு இலை பிறிது' என்றான்,

### இராமனின் பதில்

32. அண்ணலும் அது கேளா,
அகம் நிறை அருள் மிக்கான்,
வெண் நிற நகைசெய்தான்;
'வீர! நின்னுழை யாம் அப்
புண்ணிய நதி ஆடிப்
புனிதரை வழிபாடு உற்று
எண்ணிய சில நாளில்
குறுகுதும் இனிது' என்றான்.

## கங்கையாற்றைக் கடத்தல்

33. சிந்தனை உணர்கிற்பான்
சென்றனன், விரைவோடும்;
தந்தனன் நெடு நாவாய்;
தாமரை நயனத்தான்
அந்தணர்தமை எல்லாம்,
அருளுதிர் விடை' என்னா,
இந்துவின் நுதலாளோடு
இளவலொடு இனிது ஏறா.

34. 'விடு, நனி கடிது' என்றான்;
மெய் உயிர் அனையானும்,
முடுகினன், நெடு நாவாய்;
முரி திரை நெடு நீர்வாய்
கடிதினின், மட அன்னக்
கதி அது. செல, நின்றார்
இடர் உற, மறையோரும்
எரி உறு மெழுகு ஆனார்.

35. பால் உடை மொழியாளும்
பகலவன் அனையானும்,
சேலுடை நெடு நல் நீர்
சிந்தினர். விளையாட
தோலுடை நிமிர் கோலின்
துழவிட, 'எழு நாவாய்,
காலுடை நெடு ஞெண்டின்,
சென்றது கடிது அம்மா!

36. சாந்து அணி புளினத்தின்
தட முலை உயர் கங்கை,
காந்து இன மணி மின்ன,
கடி கமழ் கமலத்தின்
சித்திரக் கூடத்திற்கு வழி கேட்டல்
சேந்து ஒளி விரியும் தெண்
திரை எனும் நிமிர் எகயால்,
ஏந்தினள்; ஒரு தானே
ஏற்றினன்; இனிது அப்பால்

## சித்திரக் கூடத்திற்கு வழி கேட்டல்

37. அத் திசை உற்று. ஐயன்,
அன்பனை முகம் நோக்கி,

'சித்திர' கூடத்தின்
செல் நெறி பகர், என்ன,
பத்தியின் உயிர் ஈயும்
பரிவினன் அடி தாழா,
'உத்தம! அடி நாயேன்,
ஓதுவது உளது' என்றான்.

38. 'நெறி, இடு நெறி வல்லேன்; நேடினென். வழுவாமல்,
நறியன கனி காயும், நறவு. இவை தர வல்லேன்;
உறைவிடம் அமைவிப்பேன்; ஒரு நொடி வரை உம்மைப்
பிறிகிலேன், உடன் ஏகப் பெறுகுவேன் எனில் நாயேன்;

39. 'தீயன வகை யாவும் திசை திசை செல நூறி,
தூயன உறை கானம் துருவினென் வர வல்லேன்;
மேயின பொருள் நாடித் தருகுவேன்; வினை முற்றும்
ஏயின செய வல்லேன்; இருளினும்' நெறி செல்வேன்,

40, 'கல்லுவென் மலை; மேலும் கவலையின் முதல் யாவும்;
செல்லுவேன் நெறி தூரம்; செறி புனல் தர வல்லேன்;
வில் இனம் உளென்; ஒன்றும் வெருவலென்; இருபோதும்
மல்லினும் உயர் தோளாய்! மலர் அடி பிரியேனால்;

41. திரு உளம்எனின், மற்று என்
சேனையும் உடனே கொண்டு,
ஒருவலென் ஒருபோதும்
உறைகுவென்; உளர் ஆனார்
மருவலர் எனின், முன்னே
மாள்குவென்; வசை இல்லேன்;
பொரு அரு மணி மார்பா!
போதுவென், உடன்' என்றான்.

## குகனை அவன் இனத்தாருடன் இருக்கச் செல்லுதல்

42. அன்னவன் உரை கேளா,
அமலனும் உரைநேர்வான்;
'என் உயிர் அனையாய் நீ;
இளவல் உன் இளையான்; இந்
நன்னுதலவள் நின் கேள்;
நளிர் கடல் நிலம் எல்லாம்
உன்னுடையது; நான் உன் தொழில்
உரிமையின் உள்ளேன்'.

43. ‘துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது அது அன்றிப்
பின்பு உளது; ‘‘இடைம ன்னும்
பிரிவு உளது? என, உன்னேல்’
முன்பு உளெம், ஒரு நால்வேம்;
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்;ட

44. ‘படர் உற உளன், உம்பி,
கான் உறை பகல் எல்லாம்:
இடர் உறு பகை யா போய்,
யான் என உரியாய் நீ;
சுடர் உறு வடி வேலாய்!
சொல் முறை கடவேன் யான்;
வட திசை வரும் அந் நாள்,
நின்னுழை வருகின்றேன்

45. ‘அங்கு உள கிளை காவற்கு
அமைதியின் உளன். உம்பி
இங்கு உள கிளை காவற்கு
யார் உளர் உரை செய்யாய்;
உன் கிளை எனது அன்றோ?
உறு துயர் உறல் ஆமோ?
என் கிளை இது கா. என்
ஏவலின் இனிது, என்றான்.

### குகன் விடை பெறுதல்

46. பணி மொழி கடவாதான்,
பருவரல் இகவாதான்,
பிணி உடையவன் என்னும்
பிரிவினன், விடைகொண்டான்;
அணி இழை மயிலோடும்
ஐயனும் இளையோனும்
திணி மரம், நிறை கானில்
சேணுாறு நெறி சென்றார்.

## அயோத்தியா காண்டம்
## குகப்படலம்

*வனம் புகுந்த இராமனை குகனைத் தோழமை கொண்ட செய்தியை உணர்த்தும் பகுதியை விவரிப்பதே குகப்படலம் ஆகும்.*

## குகனின் அறிமுகம்

*இராமன் முனிவர்கள் தந்த விருந்தை அருந்தியிருந்தபொழுது, குகன் என்னும் பெயரை உடையவன் அங்கு வந்தான். அந்தக் குகன் ஆயிரம் ஓடங்களுக்குத் தலைவன். தூய்மையான கங்கையின் துறையில் பழங்காலம் தொட்டு ஓடங்களைச் செலுத்தும் உரிமை பெற்றவன். பகைவர்களைக் கொல்லும் வில்லை உடையவன். மலை போன்ற திரண்ட தோள்களை உடையவன்.*

*அந்தக் குகன் துடி என்னும் பறையை உடையவன். வேட்டைக்குத் துணைசெய்யும் நாய்களை உடையவன். தோலினால் தைக்கப்பட்ட செருப்பை அணிந்த பெரிய கால்களை உடையவன். இருள் நெருங்கி நிறைந்தைப் போன்ற நிறத்தை உடையவன். அவனது பெரிய சேனை அவனைச் சூழ்ந்திருப்பதால் நீர் கொண்டு கார் மேகம் இடியோடு கூடித் திரண்டு வந்ததைப் போன்ற தன்மை உடையவன்.*

*ஊதுகொம்பு, தந்துபி என்னும் பறை, சங்கு, முழங்கும் பேரிகை, பம்பை என்னும் பறை ஆகிய இசைக்கருவிகள் நிறைந்தகள்ள படையை உடையவன். இலை வடிவமான அம்புகளை உடையவன். ஓடங்களுக்குத் தலைவன். யானை கூட்டம் போல் பெரிய சுற்றங்களை உடையவன்.*

*காழகம் (அரைக்கால் சட்டை) என்னும் ஆடை அணிந்தவன். கங்கை ஆற்றின் ஆடித்தைக் கண்டறிந்த பெருமையை உடையவன். இடுப்பிலிருந்து தொங்கவிட்ட செந்நிறத் தோலை உடையவன். இடுப்பைச் சுற்றிக் கட்டிய ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்ட புலி வாலை உடையவன்.*

*பற்களைத் தொடுத்தது போன்ற பல அணிகலன்களைப் பூண்டவன் வீரக்கடிலை அணிந்தவன். தலை மயிரில் நெற்கதிர்களைச் செருகிக் கொண்டவன். சினம் வெளிப்பட மேலேறி வளைந்த புருவத்தை உடையவன்.*

*பனைமரம் போன்று நீண்டு வளர்ந்துள்ள கைகளை உடையவன். பாறை போன்ற மார்பினை உடையவன். எண்ணெய் பூசப்பட்ட இருளைப் போன்ற கருநிற உடம்பை உடையவன்.*

*தன் இடுப்பில் குருதிக் கறை படிந்த வாளை உடையவன். நஞ்சை உடைய நாகமும் கண்டு நடுங்குகின்ற கொடிய பார்வையை உடையவன். பைத்தியக்காரர் போல் தொடர்பில்லாத பேச்சை உடையவன். இந்திரனின் வச்சிராயுதம் போன்று உறுதியான இடையை உடையவன்.*

*விளங்குகளின் இறைச்சியையும், மீனையும் உண்ட புலால் நாற்றம் பொருந்திய வாயை உடையவன். சிரிப்பு என்பது சிறிதும் இல்லாத முகத்தினை உடையவன். கோபம் இல்லாதபோதும் கனல் கக்குமாறு பார்ப்பவன். யமனும் அஞ்சும்படி அதிர்ந்து ஒலிக்கின்ற குரலை உடையவன்.*

*சிருங்கி பேரம் என்று சொல்லப்படும் பேரலைகள் பெற்ற கங்கை ஆற்றின் அருகில் அமைந்த நகரத்தில் வாழ்பவன். அப்படிப்பட்ட குகன் முன்வர் இருப்பிடத்தில் தங்கியுள்ள இராமனைக் காண்பதற்காகத் தேனையும் மீனையும் காணிக்கையாகக் கொண்ட வந்தான்.*

*பொய்மை நீங்கிய மனத்தையும் இராமனிடம் அன்பு கொள்ளும் குணத்தையும் உடைய குகன் தன்னுடைய சுற்றத்தார் தூரத்தே நிற்க, அம்பையும் வில்லையும், வாளையும் நீக்கிவிட்டு, இராமன் தங்கியிருந்த தவச்சாலையின் வாயிலைக் கடந்தான்.*

### குகன் இலக்குவனுக்குத் தன்னை அறிவித்தல்

*வாயிலை அடைந்த குகன் தன் வருகையை உணர்த்தக் கூவிக் குரல் கொடுத்தான். முதலில் தம்பி இலக்குமணன் அவனை அணுகி, "நீ யார்?" என்று வினவினான். குகன் அவனை அன்போடு வணங்கி, "ஐயனே! நாய் போன்ற அடியவனாகிய நான் ஓடங்களைச் செலுத்தும் வேடன் ஆவேன். தங்கள் திருவடிகளைத் தொடி வந்தேன் என்று கூறினான்.*

### குகனின் வரவை இலக்குவன் இராமனுக்கு அறிவித்தல்

*இலக்குவன் "நீ இங்கேயே இரு" என்று குகனிடம் கூறிவிட்டு. தவச் சாலைக்குள் சென்று தன் தமையன் இராமனைத் தொழுது, "அரசே! தூய உள்ளம் பெற்றுள்ளவனும், தாயைக் காட்டிலும் மிக நல்லவனும், அலை மோதும் கங்கையில் செல்லும் ஓடங்களுக்கு தலைவனுமான குகன் என்னும் ஒருவன் உன்னைக் காண்பதற்காக பெருந்திரளாகத் தன் சுற்றத்தாருடன் வந்துள்ளனான்" என்று தெரிவித்தான்.*

### இராமனைக் கண்டு வணங்கிய குகன்

*இராமனும் மனமுவந்து, "நீ அந்தக் குகனை என்னிடம் அழைத்து வா" என்று கூறினான். இலக்குவனும் குகனை நோக்கி, "உள்ளே வா" என்றான். அதைக்கேட்ட குகன் விரைவாக உள்ளே சென்று, இராமனைத் தன் கண்ணினால் கண்டு களிப்படைந்தான். தன் கருமை நிற முடிகள் தரையில் படுமாறு அவனை வணங்கி எழுந்து, உடல் வளைத்து, வாயினைத் தன் கைகளால் பொத்திப் பணிவோடு நின்றான்.*

### குகன் தன் கையுறைப் பொருளை அறிவித்தல்

*“இங்கே அமர்க” என்று குகனிடம் இராமன் கூறினான். ஆனால் குகன் அமரவில்லை. இராமனிடம் அளவு கடந்த அன்பை உடைய அந்தக் குகன், இராமனை நோக்கி, “தங்கள் உணவாக அமையும்படி தேனையும், மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டு வந்துள்ளேன். தங்களுடைய எண்ணம் யாதோ?” என்று கேட்டான். இராமன் முனிவர்களை நோக்கிப் புன்னகைத்து விட்டு பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்.*

### குகனது அன்பை இராமன் பாராட்டுதல்

*மனம் மகிழும்படி உள்ளத்திலே உண்டான அன்பின் தூண்டுதலால் பக்தி ஏற்பட அருமையாகக் கொண்டு வரப்பட்ட இத்தேனும் மீனும் அமிழதத்தைக் காட்டிலும் சிறந்தவை அல்லவா? நீ கொண்டு வந்தவை எவையாயினும் சரி, அவை அன்போது பொருந்தியவை என்றால் தூய்மையானவையே! அவை எம்மைப் போன்றவர்கள் ஏற்கத் தக்கவையே. ஆதலால் நாம் அவற்றை இனிதாக உண்டவர்போல் ஆனோம்” என்று குகனிடம் கூறினான் இராமன்.*

### விடியலில் நாவாய் கொண்டு வர குகனிடம் இராமன் கூறல்

*ஆண் சிங்கம் போன்ற இராமன் “நாம் இன்று இத்தவச்சாலையில் தங்கி நாளை கங்கையைக் கடப்போம். எனவே, நீ உன் சுற்றத்தாரோடு இங்கிருந்து சென்று, உன்னுடைய நகரத்தில் உவகையோடு தங்கிவிட்டு இங்கே வருக” என்று கூறினான்.*

### குகனது வேண்டுகோள்

*இராமன் இவ்வாறு கூறியதும், குகன் “இவ்வுலகம் முழுவதையும் உனக்குரிய செல்வமாகக் கொண்டவனே! உன்னை இந்தத்தவவேடத்தில் பார்த்த என் கண்களைப் பறித்து எறியாத கள்ளன் நான். இந்தத் துன்பத்தோடு உன்னைப் பிரிந்து எனது இருப்பிடத்தை நோக்கிச் செல்ல மாட்டேன். ஐயனே! இங்கிருந்து என்னாலான அடிமைத் தொழிலை உனக்குச் செய்கிறேன்” என்று கூறினான்.*

### குகனின் வேண்டுகோளை இராமன் ஏற்றல்

*மாலை சூடப்பட்ட வில்லை உடைய இராமன், குகன் கூறிய கருத்தைக் கேட்டான். உடனே சீதையின் முகத்தை நோக்கி, இலக்குவனின் திருமுகத்தை நோக்கி, அவர்கள் மனமும் குகனின் அன்பை ஏற்றுக் கொள்வதை அறிந்து, “இவன் நம்மிடம் நீங்காத அன்புடையவன் ஆவான்” என்று கூறி கருணையினால் மலர்ந்த கண்கள் உடையவனாகி, “இனிமையான நண்பனே! நீ விரும்பியவாறு இன்று என்னோடு தங்கியிரு” என்று குகனிடம் கூறினான்.*

*இராமன் இன்று எம்மொடு தங்குக என்ற சொல்லக் கேட்ட குகன், இராமன் திருவடிகளை வணங்கி, மகிழ்ச்சி மிக, கடலை ஒத்த கடிப்பறையோடு கூடிய தனது சேனைப் பெருக்கை அழைத்து, அவர்கள் தங்கியுள்ள தவச்சாலையைச் சுற்றிப் பாதுகாக்கக் கட்டளையிட்டு, தானும் கட்டமைந்த வில்லைப் பிடித்து வாளையும் அரைக்கச்சிலே கட்டி, கூரிய மழை மேகம் போல உரத்த சத்தம் இட்டு, அத்தவச் சாலையில் அம்மூவரையும் காவல்செய்து நின்றான்.*

### இராமன் நகர் நீங்கிய காரணம் அறிந்து குகன் வருந்துதல்:

*"மனு குலத்தில் வந்த மன்னனே! நீ அழகிய அயோத்தி நகரை விட்டு இங்கு வந்த காரணத்தைத் தெரிவிப்பாயாக" என்று குகன் கேட்டான். இலக்குவன், இராமனுக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்ல அதைக் கேட்டு இரங்கியவனான குகன் மிக்க துன்பமுற்று, "பூமி தேவி தவம் செய்தவளாக இருந்தும், அத்தவத்தின் பயனை முழுவதும் பெறவில்லை போலும் இதென்ன வியப்பு" என்று கூறி இரண்டு கண்களும் அருவி போலக் கண்ணீர் சொரிய அங்கே இருந்தான்.*

### கதிரவன் மறைதல்

*இருள் போன்ற பகையைத் தொலைத்து, திசைகளை வென்று, அனைவருக்கும் மேலாக விளங்கி, தனது ஒப்பற்ற ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி, உயர்ந்த புகழை நிலைக்கச் செய்து உலகத்தில் உள்ள அனைவர் உள்ளத்திலும் இடம்பெற்ற கருணைக்காட்டி பின் இறந்து போன வலிமை பெற்ற மாவீரனான தசரதனைப் போல செந்நிறக் கதிர்களைப் பெற்ற சூரியன் மறைந்தான்.*

### இராமனும் சீதையும் உறங்க இலக்குவன் காவல் இருந்தல்

*மாலை வேலையில் செய்ய வேண்டிய கடமைகளை செப்பமான முறையில் செய்து, அங்கு தங்கிய இராமனும் பாற்கடலில் தோன்றிய அமுதம் போன்ற சீதையும் பரந்த பூமியில் பரப்பப்பட்ட படுக்கையில் படுத்தனர். இலக்குவன் வில்லை ஏந்திக் கொண்டு விடியற்காலை தோன்றும் விரையிலும் கண்ணை இமைக்காமல் விழிப்போடு காத்து நின்றான்.*

### இராம இலக்குவரை நோக்கி குகன் இரவு முழுவதும் கண்ணீர் வழிய நிற்றல்

*யானைக் கூட்டத்தைப் போலத் தன்னைச் சுற்றியிருக்கும் சுற்றத்தாரை உடையவனும், அம்பு தொடுக்கப்பட்ட வில்லை உடையவனும், வெம்மை ஏறிக் கொதித்து நிலைகுலையும் மனத்தை உடையவனும், ஓடங்களுக்குத் தலைவனுமான குகன், கண்*

*இமைக்காது நின்ற இலக்குவனைப் பார்த்தும் இராமன் நாணற் புல்லிலே படுத்திக்கும் நிலையைப் பாத்ததும் கண்ணீர் அருவியைச் சொரியும் மலை போன்ற நின்றான்.*

## கதிரவன் தோன்றலும் தாமரை மலர்தலும்

*உலகத்து உயிர்களைப் போலப் பிறத்தல் என்பதைப் பெறாதவனான சூரியன் அளவற்ற பிறப்புகளை உடைய உயிர்கள் யாவும் இறக்கும் முறை இதுதான் என்று உலகத்தாருக்குக் காட்டுகின்ற வனைப் போல முந்திய நாள் மாலையில் மறைந்தான். அடுத்த நாள், காலையில் இறந்த உயிர்கள் மீண்டும் பிறக்கும் முறை இதுதான் என்று காட்டுகின்றவனைப் போல உதித்தான். ஆதலால் சொர்க்கம் முதலான சிறந்த உலகங்கள் எவையாயினும், அவற்றை மறந்து விடும் வழியை (வீடுபேறு) நினைப்பீராக...*

*சேற்றில் தோன்றும் செந்தாமரை மலர்கள் சூரியனது தோற்றத்தைக் கண்டனவாய், செக்சச் செவ்வேல் என்று மலர்ந்தன. அச்சூரியனைக் காட்டிலும் வேறான ஒரு கருஞ்சூரியனைப் போன்ற இராமனைக் கண்டு சீதையின் ஒளிபொருந்திய முகம் என்னும் தாமரை மலர்ந்தது.*

## குகனை நாவாய் கொணருமாறு இராமன் பணித்தல்

*பகைவருக்கு அச்சம் தரும் தோளில் வில்லை வில்லை உடைய இராமன், விடியற்காலையில் செய்ய வேண்டிய கடமைகளை விருப்பத்தோடு செய்து முடித்து முனிவர்கள் தன்னைப் பின் தொடர்ந்து வர அங்கிருந்து புறப்பட்டான். குகனை நோக்கி, ஐயனே! எம்மைக் கொண்டு செல்வதற்குரிய ஓடத்தை விரைவாகக் கொண்டு வருக" என கூறினான்.*

## இராமனை தன் இருப்பிடத்தில் தங்க குகன் வேண்டுதல்

*இராமன் இட்ட கட்டளையைக் கேட்ட குகன் கண்ணீரைப் பொழியும் கண்களையுடையவனாய், இராமனின் திருவடிகளைப் பிரிய விரும்பாதவனாய், சீதையோடு இராமனின் திருவடி வணங்கித் தன் எண்ணத்தைச் சொல்லனான்.*

*"ஒழுங்காகத் தொடுக்கப்பட்ட மாலை அணிந்தவனே! நாங்கள் பொய் வாழ்க்கை பெறாதவர்கள் நாங்கள் வாழும் இடம் காடே ஆகும். நாங்கள் குறையற்றவர்கள். வலிமை பெற்றவர்கள் செய்ய வேண்டிய முறைப்படி நீங்கள் சொல்லும் வேலைகளைச் செய்வோம். எங்களை உங்கள் உறவினராகக் கருதி, எங்கள் ஊரில் நெடுங்காலம் இனிதாகத் தங்கி இருப்பாயாக"...*

"என்னிடம் தேன் உள்ளது திணையும் உள்ளது. அவை தேவர்களும் விரும்பி உண்பதற்கு உரியவையாகும். மாமிசமும் இங்கு உள்ளது. உமக்குத் துணையாக நாய் போல் அடிமைப்பட்டவராகிய எங்கள் உயிர்கள் உன்னை விளையாடுவதற்குக் காடு இருக்கிறது. நான் உயிரோடு உள்ளவரை நீ இங்கேயே இனிதாக இருப்பாயாக இப்போதே எம்மிடம் வருகி"...

உடுத்திக் கொள்ள மெல்லிய ஆடை போன்ற தோல்கள் உள்ளன. உண்பதற்குச் சுவையான உணவு வகைகள் உள்ளன. தொங்கவிடப் பட்ட பரண்கள் உள்ளன. தங்குவதற்குச் சிறுகுடிசைகள் உள்ளன. வில்லைப் பிடித்துப் போரிடக் கைகள் உள்ளன. நீ விரும்பும் பொருள் ஒலிக்கும் வானத்தின் மீதுள்ள பொருளாக இருந்தாலும் விரைவாகக் கொண்டு வந்துக் கொடுப்போம்.

"எனக்கு பணிசெய்வோராகிய வில்லை ஏந்தி வேடர்கள் ஐந்நூறாயிரம் பேர் உள்ளனர். அவர்கள் தேவர்களைக் காட்டிலும் வலிமைப் பெற்றவர்கள். எங்கள் குடியிருப்பில் நீ ஒரே ஒரு நாள் தங்கினாய் என்றாலும் நாங்கள் கடைத்தேறுவாம். அதைக் காட்டிலும் வேறான ஒரு சிறப்பு எங்களுக்கு இல்லை" என்றான் குகன்.

## மீண்டும் வருகையில் குகனிடம் வருவதாக இராமன் இயம்பல்!

குகனது வேண்டுகோளைக் கேட்ட இராமனும் அவனிடம் கொண்ட மனக் கருணை அதிகமாக வெண்ணிறப் பற்கள் தோன்றச் சிரித்தான். "வீரனே! நாங்கள் அந்தப் புண்ணிய நதிகளில் நீராடி, ஆங்காங்கு உள்ள முனிவரை வழிபாடு செய்து நாங்கள் வனவாசம் செய்ய வேண்டிய சில நாட்கள் முடிந்ததும் உன்னிடம் இனிதாக வந்து சேருவோம்" என்று கூறினான்.

## குகன் நாவாய் கொணர, மூவரும் கங்கையைக் கடத்தல்

இராமனின் கருத்தை அறிந்த குகன் விரைவாகச் சென்று பெரிய படகு ஒன்றைக் கொண்டு வந்தான். தாமரை மலர் போலும் கண்களை உடைய இராமன். அங்கிருந்த முனிவர்களை அந்தணர்கள் அனைவரிடமும் விடை தருக என்று கூறிக் கொண்டு பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியைப் பெற்ற சீதையோடும் இலக்குவனோடும் அப்படகில் இனிதாக ஏறினான்.

ஆற்றிலே படகை விரைவாகச் செலுத்து என்றான் இராமன். அந்த இராமனுக்கு உண்மையான உயிர் போன்றவனான குகனும், மடங்கும் அலைகளை உடைய கங்கை ஆற்றிலே செலுத்திய பெரிய படகு விசையாகவும், இள அன்னம் நடப்பதைப்போல அழகாகவும்

சென்றது. கூரையில் நின்றவர்களான முனிவர்கள் இராமனைப் பிரிந்த துயரத்தால் நெருப்பிலே பட்ட மெழுகைப் போல மனம் உருகினர்.

பாலைப் போன்ற இனிய மொழி பேசும் சீதையும் சூரியனைப் போன்ற இராமனும், சேல் மீன்கள் வாழும் கங்கையின் புனித நீரை அள்ளி எடுத்து, ஒருவர் மீது ஒருவர் வீசி விளையாடிக் கொண்டிருக்க, நீண்ட கோலினால் நீரைத் துழாவிச் செலுத்தப்பட்ட அந்தப் பெரிய படகு, பல கால்களை உடைய பெரிய தண்டு போல விரைவாகச் சென்றது.

சந்தனத்தை அணிந்துள்ள மணற்குன்றுகளாகிய பெரிய கொங்கைகளை உடைய சிறந்த கங்காதேவி, ஒளி வீசும் மாணிக்க மணிகள் சிறந்த கங்காதேவி, ஒளி வீசும் மாணிக் மணிகள் மின்னுவதால், நறுமணம் வீசும் தாமரை மலரைப் போலச் செந்நிறவொளி பரவப் பெற்ற தெள்ளிய அலைகள் என்னும் நீண்ட கைகளால், தான் ஒருத்தியே அப்படகை ஏந்தி அக்கரையில் சேர்ந்தனள்.

## இராமன் குகனிடம் சித்திரகூடம் செல்லும் வழி பற்றி வினவுதல்

கங்கையின் மறு கரையை அடைந்த இராமன் தன்னிடம் அன்பு கொண்ட குகனை நோக்கி, "சித்திரக் கூட்டத்துக்குச் செல்லும் வழியைச் சொல்லுக" என்று கேட்டான். குகன் இராமனின் திருவடிகளை வணங்கி, "உத்தமனே! நான் உங்களிடம் சொல்ல வேண்டியது ஒன்று உள்ளது" என்றான்.

"நான் உங்களுடன் வரும் பேறு பெறுவாயேயானால், நேர் வழியையும், அதில் குறுக்கிடும் பல வழியையும் பல கிளை வழிகளையும், அறியும் வல்லமை உடைய நான் தக்கபடி வழிகாட்டுவேன். பழுது நேராமல் நல்லவனாகிய காய்களையும், கனிகளையும் தேனையும் தேடிக் கொண்டு வந்து கொடுப்பேன். ஆங்காங்கே தங்குவதற்குத் தகுந்த குழல் அமைத்துக கொடுப்பேன். ஒரு நொடிப் பொழுதும் உம்மைப் பிரிய மாட்டேன்" என்று குகன் கூறினான்.

"தீய விலங்குகளின் வகைளை, நீங்கள் தங்கும் இடத்தைச் சூழ்ந்த எல்லாத் திசைகளிலும் நெருங்க விடாமல் சென்று அவற்றை அழித்து, தூயவனாகிய மான் மயில் போன்றவை வாழும் காட்டித்தை ஆராய்ந்துக் கண்டுபிடித்துக் காட்டும் வல்லமைப் பெற்றுள்ளேன். நீங்கள் விரும்பிய பொருளைத் தேடிக் கொண்டு வந்து கொடுப்பேன். நீங்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவேன். இரவிலும் வழி அறிந்து நடப்பேன்" என்று குகன் கூறினான்.

மற்போரிலும் சிறப்புப் பெற்ற தோள்களை உடையவனே! செல்லும் இடம் மலைப் பகுதியானாலும் அங்கே கவலைக் கிழங்கு

முதலியவற்றைத் தோண்டி எடுத்துத் தருவேன். வெகு தொலைவில் உள்ள வழியிலும் சென்று அங்குள்ள நீரைக் கொண்டு வந்து கொடுப்பேன். பலவகையான வில்லைப் பெற்றுள்ளேன். எதற்கும் அஞ்ச மாட்டேன். உங்களுடைய மலர் போன்ற திருவடியை ஒரு போதும் பிரிய மாட்டேன்" என்று குகன் கூறினான்.

"ஒப்பற்ற மார்பை உடையவனே! தங்கள் சம்மதித்தால் எனது படையை உடன் அழைத்துக் கொண்டு ஒரு பொழுதும் உங்களைப் பிரியாது உங்களுடன் இருப்பேன். என்னால் வெல்ல முடியாத பகைவர்கள் வந்தாலும் உங்களுக்குத் தீங்கு நேரும் முன் நான் இறந்து போவேன். எந்தப் பழியும் பெறாதவனாகிய நான் உம்மோடு வருவேன்." என்று குகன் கூறினான்.

## குகனை அவன் இனத்தாருடன் இருக்க இராமன் பணித்தல்

குகன் கூறியவற்றைக் கேட்ட இராமன் "நீ எனது உயிர் போன்றவன். என் தம்பி இலக்குவன் உனக்குத் தம்பி போன்றவன். அழகிய நெற்றியைப் பெற்ற இச்சீதை உனக்கு உறவினள். குளிர்ந்த கடலால் சூழப்பட்ட இந்நாடு முழுவதும் உன்னுடையது" என்றான்.

"துன்பம் உண்டு என்றால் சுகமும் உண்டு. இப்போது இணைந் திருப்பதற்கும், வனவாசத்திற்குப் பின் இணைந்திருக்கப் போவதற்கும் இடைப்பட்டதான பிரிவு என்னும் துன்பம் உள்ளதே என்று எண்ணாதே. உன்னைக் கண்டு தோழமை கொள்வதற்கு முன்னே உடன் பிறந்தவர்களாக நாங்கள் நால்வர் இருந்தோம். இப்போது எல்லையற்ற அன்புடைய உடன்பிறந்தார்களாகிய நாம் ஐவர் ஆகிவிட்டோம்" என்றான் இராமன்.

## "அன்பு வா, இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்;"

ஒளி வீசும் கூரிய வேலை உடையவனே! நான் காட்டில் வாழும் காலமெல்லாம் உன் தம்பியாகிய இலக்குவன் என்னுடன் இருக்கப் போகிறான். எனவே துன்புறுத்தும் வகைகள் எவை? ஒன்றும் இல்லை. உன் இருப்பிடத்திற்குச் சென்று நான் இருந்து மக்களைக் காப்பது போலக் காப்பதற்கு உரியவன் நீ! வனவாசம் முடிந்து அயோத்திக்குத் திரும்ப வடக்கு நோக்கி வரும் அந்த நாளில் உன்னிடம் உறுதியாக வருவேன் நான் சொன்ன சொல்லைத் தவற மாட்டேன்.

உன் தம்பியாகிய பரதன் அயோத்தியில் உள்ள சுற்றத்தாரைக் காப்பதற்கு ஏற்ற தகுதியோடு இருக்கிறான். நீ என்னுடன் வந்து விட்டால் இங்குள்ள சுற்றத்தாரைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள். நீயே சொல் உன் சுற்றத்தார் என் சுற்றத்தார் அல்லவா? அதனால்

*அவர்கள் தம்மைக் காப்பாற்றுவார் இல்லாமல் மிகுந்த துன்பத்தை அடைதல் தகுமா? இங்குள்ள என் சுற்றத்தாரை என் கட்டளையை ஏற்று இனிதாகக் காப்பாயாக" என்றான் இராமன்.*

## குகன் விடைபெறுதலும், மூவரும் காட்டிற்குள் செல்லுதலும்

*இராமன் இட்ட கட்டளையை மீறாதவனும் அவனைப் பிரிவதால் உண்டான துன்பத்திலிருந்து நீங்காதவனும் நோய் கொண்டவன் என்று பிறர் நினைக்குமாறு பிரிவுத் துன்பத்தை உடையவனுமான குகன் இராமனிடம் விடை பெற்றுக் கொண்டான். பின்பு இராமனும் இலக்குவனும் அழகிய ஆபரணங்களை அணிந்த மயிலைப் போன்ற சீதையோடு அடர்ந்த மரங்கள் நிறைந்த காட்டில் நெடுந்தூரம் செல்வதற்குரிய வழியிலே நடந்து சென்றார்கள்.*